



PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY






சென்னை மலர்: 01 இதழ்: 257 29.04.2026 புதன்கிழமை

Chennai Volume: 01 Issue: 257 Wednesday pages 8 Rs.5/-


DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


# மேற்கு வங்கத்தில் 142 தொகுதிகளில் இன்று வாக்குப்பதிவு

## தேர்தலுக்குப் பிந்தைய கணிப்புகள் மாலை வெளியாகும்







**கொல்கத்தா, ஏப்.29:**

மேற்கு வங்கத்தில் இறுதிக்கட்ட தேர்தல் பிரச்சாரம் நேற்றுடன் முடிவடைந்தது. அங்கு 142 தொகுதிகளில் நாளை வாக்குப்பதிவு நடைபெறுகிறது. மாலை வாக்குப்பதிவு முடிந்ததும், தமிழகம், கேரளா, அசாம், மேற்கு வங்கம் ஆகிய 4 மாநிலங்கள், புதுச்சேரி யூனியன் பிரதேசம் ஆகியவற்றின் தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகள் வெளியாகின்றன.

மேற்கு வங்க மாநில சட்டப்பேரவை தேர்தல் ஏப்.23, 29 ஆகிய தேதிகளில் 2 கட்டங்களாக நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்தது. அங்கு ஆளும் திரிணமூல் காங்கிரஸ், பாஜக, கம்யூனிஸ்ட் கட்சிகள், காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தேர்தலில் தனித்தனியாக போட்டியிடுகின்றன. குறிப்பாக திரிணமூல் - பாஜக இடையே நேரடி போட்டி நிலவுகிறது.

இங்கு மொத்தம் 294 தொகுதிகள் உள்ளன. இவற்றில் 152 தொகுதிகளுக்கு கடந்த 23-ம் தேதி முதல் கட்ட தேர்தல் நடைபெற்றது. மொத்தம் 1,478 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். 3.60 கோடி பேர் வாக்குரிமை பெற்று உள்ளனர். அவர்களுக்காக 44,376 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. அனைத்து வாக்குச்சாவடிகளிலும் காலை முதலே பொது மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்குரிமையை செலுத்தினர்.

93.19 சதவீத வாக்குப்பதிவு: கடந்த கால மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தல்களில் பெருமளவில் வன்முறை சம்பவங்கள் அரங்கேறின. இதை தடுக்க மத்திய பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த 2.4 லட்சம் வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்களோடு மாநில போலீஸாரும் பாதுகாப்பு பணியை மேற்கொண்டனர். முதல்கட்டத் தேர்தலில் 93.19 சதவீத வாக்குகள் பதிவாகின.

இந்நிலையில், மீதம் உள்ள 142 தொகுதிகளில் நாளை இறுதிக்கட்ட தேர்தல் நடைபெறுகிறது. இந்த தொகுதிகள் கொல்கத்தா வடக்கு, கொல்கத்தா தெற்கு, ஹவுரா, நாடியா, வடக்கு 24 பர்கானாஸ், தெற்கு 24 பர்கானாஸ், ஹூக்ளி மற்றும் புர்தா பர்தாமன் ஆகிய 8 மாவட்டங்களில் உள்ளது.

இங்கு நேற்று முன்தினம் மாலை 6 மணியுடன் இறுதிக்கட்ட தேர்தல் பிரச்சாரம் நிறைவடைந்தது. மாநிலத்தில் உள்ள 142 தொகுதிகளுக்கும் நாளை இறுதிக்கட்ட தேர்தல் நடைபெறுகிறது. வாக்குப்பதிவு காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெறுகிறது.

ஆணையத்திடம் 800 புகார்கள்: முதல் கட்ட வாக்குப்பதிவின்போது வன்முறை சம்பவங்கள், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தொடர்பாக தேர்தல் ஆணையத்திடம் 700-க்கும் மேற்பட்ட புகார்கள் அளிக்கப்பட்டன. வாக்காளர்களைத் தாக்கியது, கட்சி சார்பில் அமைக்கப்பட்ட பந்தல்களை உடைத்தது தொடர்பாக சிஆர்பிஎப் போலீஸாருக்கு எதிராக 100 புகார் மனுக்கள் அளிக்கப்பட்டன. இவற்றை கருத்தில் கொண்டு, தற்போது இறுதிக்கட்ட வாக்குப்பதிவில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் முடிந்ததும் மாலை தமிழகம், கேரளா, அசாம், மேற்கு வங்கம் ஆகிய 4 மாநிலங்கள், புதுச்சேரி யூனியன் பிரதேசம் ஆகியவற்றின் தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகள் வெளியாகின்றன.

## இன்றைய நாள்

புதன்கிழமை
(29-04-2026)
பராபவ ஆண்டு, சித்திரை-16

பிறை: வளர்பிறை

திதி
திரயோதசி இரவு 9.01 வரை
பிறகு சதுர்த்தசி.

நட்சத்திரம்:
அஸ்தம் நள்ளிரவு 1.10 வரை
பிறகு சித்திரை.

யோகம்
மரண/சித்தயோகம்

ராகுகாலம்
நண்பகல் 12.00-1.30 மணி.


எமகண்டம்
காலை 7.30-9.00 மணி

சூலம் - வடக்கு

நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 4-5 மணி.

மேஷம் ..................களிப்பு
ரிஷபம்.................. இன்பம்
மிதுனம் .................வெற்றி
கடகம் .......................சுகம்
சிம்மம் .................கவனம்
கன்னி .......................வரவு
துலாம் ......................புகழ்
விருச்சிகம்............போட்டி
தனுசு ................ மேன்மை
மகரம் .................. ஆக்கம்
கும்பம்.................. உதவி
மீனம் .................... நன்மை

## சித்திரை திருவிழா: மீனாட்சி-சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் கோலாகலம்: லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பு



**மதுரை, ஏப்.29:**

உலகப்புகழ்பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சித்திரை திருவிழா கடந்த 19-ந்தேதி தொடங்கியது. விழாவில் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றான மீனாட்சி அம்மன் பட்டாபிஷேகம் நேற்று முன்தினம் நடந்தது. அப்போது மதுரையின் அரசியாக மீனாட்சிக்கு முடிசூட்டப்பட்டது. அதை தொடர்ந்து மீனாட்சி அம்மன். போரில் தேவர்களை வென்று இறுதியில் சிவபெருமானுடன் போர் புரியும் திக்கு விஜயம் நிகழ்ச்சி நேற்று நடந்தது.

அப்போது வில், அம்புடன் சிறப்பு அலங்காரத்தில் சுவாமி, அம்மன் காட்சி தந்தனர். இதில், மீனாட்சி அம்மனாக சிவாதித்யன், சுந்தரேசுவரராக சட்டநாத ராஜசேகரன் ஆகியோர் வேடம் தரித்து போர் புரிவது போன்று நடித்து காண்பித்தனர். இதனை காண மாசி வீதிகளில் கூட்டம் அலைமோதியது.

விழாவின் சிகர நிகழ்ச்சியாக மீனாட்சி அம்மன், சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை கோலாகலமாக நடந்தது. அதிகாலை 4 மணி அளவில் சுந்தரேசுவரரும், மீனாட்சி அம்மனும் வெள்ளி சிம்மாசனத்தில் எழுந்தருளி சித்திரை வீதிகளில் வலம் வந்தனர். பின்னர் சுவாமி முத்துராமய்யர் மண்டபத்தில் கன்னி ஊஞ்சலாகி ஊர்வலமாக சென்று ஆடி வீதியில் திருக்கல்யாண மணமேடையில் எழுந்தருளினர்.

தொடர்ந்து 8.35 மணிக்கு மேல் 8.59 மணிக்குள் ரிஷப லக்னத்தில் மீனாட்சி அம்மன், சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் கோலாகலமாக நடந்தது. வேத மந்திரங்கள் மங்கள வாத்தியங்கள் முழங்கிடத் திருமண சடங்குகள் நடத்தப்பட்டு மீனாட்சி அம்மன் மற்றும் சுவாமிக்கு பட்டு வஸ்திரம் சாத்தப்பட்டதைத் தொடர்ந்து சுந்தரேஸ்வரரிடம் இருந்து பெற்ற மங்கலநாணைச் சிவாச்சாரியார் மீனாட்சி அம்மனுக்கு அணிவிக்கத் திருக்கல்யாண வைபவம் கோலாகலமாக நடைபெற்றது.

பவளக்கனிவாய் பெருமாள் தாரைவார்த்துக் கொடுக்க, பக்தர்களின் வாழ்த்தொலி விண்ணை முட்ட, மீனாட்சியம்மன் கழுத்தில் வைரக்கல் பதித்த தங்க திருமாங்கல்யம் அணிவிக்கப்பட்டது.

இதில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். விழாவில் பங்கேற்ற பெண்கள் தங்களது திருமாங்கல்ய கயிறை புதிதாக மாற்றிக்கொண்டனர். 10 டன் வண்ணமிகு மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்த பிரம்மாண்ட திருக்கல்யாண மேடையில் திருப்பரங்குன்றத்திலிருந்து முருகன் பெருமான் தெய்வானையுடனும், பவளக்கனிவாய் பெருமாளும் எழுந்தருளியுள்ளனர்.

திருக்கல்யாணம் முடிந்தபின் அம்மனும், சுவாமியும் மணக்கோலத்தில் பழைய திருக்கல்யாண மண்டபத்தில் எழுந்தருளி நேற்று பகல் முழுவதும் பக்தர்களுக்கு காட்சி அளிக்க உள்ளனர். இரவு 7.30 மணிக்கு சுந்த ரேசுவரர் தங்கஅம்பாரியுடன் கூடிய யானை வாகனத்திலும், மீனாட்சி அம்மன் ஆனந்தராயர் பூப்பல்லக்கிலும் எழுந்தருளி நான்கு மாசி வீதிகளை வலம் வருவார்கள்.

திருக்கல்யாணத்தை பக்தர்கள் நேரில் காண்பதற்காக வடக்கு மற்றும் மேற்கு ஆடி வீதிகளில் தகர பந்தல் பிரமாண்டமாக அமைக்கப்பட்டு உள்ளது.

## திருச்செந்தூர் முருகன் கோவிலில் விஜய் சாமி தரிசனம்



**திருச்செந்தூர், ஏப்.29:**

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரும், நடிகருமான விஜய், இன்று காலை அறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் சாமி தரிசனம் செய்தார்.

விஜய் நேற்று இரவு சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் மதுரை சென்றடைந்தார். அங்கிருந்து இன்று அதிகாலை சாலை மார்க்கமாகப் புறப்பட்டு திருச்செந்தூர் வந்தடைந்தார். அவருக்கு தமிழக வெற்றிக் கழகத் தொண்டர்கள் உற்சாகமான வரவேற்பு அளித்தனர்.

பட்டு வேட்டி மற்றும் சட்டையில் வந்திருந்த விஜய், மூலவர் சுப்பிரமணிய சுவாமியை தரிசனம் செய்தார். அவருக்கு கோவில் நிர்வாகம் சார்பில் பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டதுடன், 'வெற்றி வேல்' வழங்கி கௌரவிக்கப்பட்டார். பின்னர் கடற்கரைக்கும் சென்று விஜய் வழிபாடு செய்தார்.

விஜய் வருகையை முன்னிட்டு அதிகாலை முதலே ஆயிரக்கணக்கான ரசிகர்கள் மற்றும் பொதுமக்கள் கோவில் வளாகத்தில் திரண்டனர். அவரைக் காண மக்கள் முண்டியடித்ததால் அப்பகுதியில் பெரும் நெரிசல் ஏற்பட்டது.

கூட்டத்தை ஒழுங்குபடுத்தவும், எவ்வித அசம்பாவிதமும் நடைபெறாமல் இருக்கவும் திருச்செந்தூர் முழுவதும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மே 4-ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ள நிலையில், திருச்செந்தூர் முருகன் கோவிலில் விஜய் சாமி தரிசனம் செய்தது அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## கிராம சபை கூட்டம் மே 1ல் கிடையாது

**சென்னை, ஏப்.29:**

தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருப்பதால், மே 1ல் கிராம சபை கூட்டம் நடக்காது' என, ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது குறித்து, அவர்கள் கூறியதாவது:

தமிழகத்தில் கடந்த, 23ம் தேதி, சட்டசபை தேர்தல் நடந்தது. வாக்குப்பதிவு முடிந்தாலும், வாக்கு எண்ணிக்கை நடக்கும் மே 4ம் தேதி வரை, தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும். வழக்கமாக தொழிலாளர் தினமான, மே 1ல், அனைத்து ஊராட்சிகளிலும், கிராம சபை கூட்டம் நடக்கும். தற்போது தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால், மே 1ம் தேதியன்று, கிராம சபைக்கூட்டம் நடக்காது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## வந்தே பாரத் ரெயில் தடம் புரண்டு விபத்து

**மும்பை, ஏப்.29:**

மும்பை அருகே வந்தே பாரத் ரயில் தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. மும்பை - சோலாப்பூர் வந்தே பாரத் ரயில் புனே ரயில் நிலையம் அருகே சென்றபோது 4-வது பெட்டி தண்டவாளத்தில் இருந்து விலகி கீழே இறங்கியது.

இதனால் ரயிலில் இருந்த பயணிகள் அதிர்ச்சியடைந்தனர். எனினும் யாருக்கும் எந்த காயமும் ஏற்படவில்லை. தடம் புரண்ட வந்தே பாரத் ரயில் பெட்டிகளை சீர் செய்யும் பணியில் ரயில்வே ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## கிரிமினல் வழக்குகளில் கைதாகும் முதல்வர்கள், பிரதமர்களை பதவி நீக்கக்கோரும் மசோதா: கருத்துகளைப் பெறும் நாடாளுமன்ற கூட்டுக்குழு

**புதுடெல்லி, ஏப்.29:**

கிரிமினல் வழக்குகளில் கைதாகும் மாநில முதல்வர்கள், பிரதமர்களை பதவி நீக்க வழிவகை செய்யும் மசோதா குறித்து அனைத்து தரப்பினரின் கருத்துகளையும் நாடாளுமன்ற கூட்டுக்குழு (ஜேபிசி) பெற்று வருகிறது.

இதுதொடர்பாக கடந்த 2025-ஆம் ஆண்டில் இந்திய அரசமைப்பு சட்ட (130-ஆவது திருத்த) மசோதா கொண்டு வரப்பட்டது. அந்த மசோதாவில், 5 ஆண்டுகள் அல்லது அதற்கு அதிக ஆண்டுகள் சிறை தண்டனை கிடைக்கும் கிரிமினல் வழக்குகளில், பிரதமர்கள், மாநில முதல்வாகள், அமைச்சாகள் கைது செய்யப்பட்டு 30 நாள்களுக்கும் மேல் சிறையில் இருந்தால் தாமாக பதவி நீக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த மசோதாவை, அபராஜிதா சாரங்கி தலைமையிலான 31 எம்.பி.க்களை கொண்ட நாடாளுமன்ற கூட்டுக்குழு ஆய்வு செய்து வருகிறது. ஆளும் கட்சி கூட்டணி மற்றும் எதிாக்கட்சிகள் கூட்டணி உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் கருத்துக்களையும் அக்குழு பெற்று வருகிறது.

மும்பையில் மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர ஃபட்னவீஸ் மற்றும் மூத்த அரசு அதிகாரிகளுடன் அக்குழு திங்கள்கிழமை ஆலோசனை நடத்தியது. அதன்பிறகு செய்தியாளாகளிடம் நாடாளுமன்ற கூட்டுக்குழுத் தலைவா அபராஜிதா சாரங்கி கூறியதாவது:

மசோதா குறித்து 3 முக்கிய யோசனைகளை ஃபட்னவீஸ் தெரிவித்துள்ளாா். அதுகுறித்து ஆராயப்படும்.

இதுபோல அனைத்து எதிாக்கட்சிகளுடனும், ஆளும் கட்சியுடனும் குழு ஆலோசனை நடத்தும். பிறகு குழு தனது அறிக்கையை தயாா் செய்து, மக்களவைத் தலைவா் ஓம் பிா்லாவிடம் தாக்கல் செய்யும். அரசியல் குற்றமயமாவதை தடுக்க இந்த மசோதா உதவும்.

மேலும், இந்தியாவில் ஜனநாயகத்தை சுத்தப்படுத்தவும், வலுப்படுத்தவும், மிகவும் பொறுப்புடையதாக்கவும் உதவும். இதேபோல், ஜம்மு-காஷ்மீா் மறுசீரமைப்பு (திருத்த) மசோதா, யூனியன் பிரதேச அரசு (திருத்த) மசோதா ஆகியவை குறித்தும் நாடாளுமன்ற கூட்டுக்குழு ஆய்வு செய்து வருகிறது என்றாா்.



## தமிழீழ விடுதலைப் பாடகர் தேனிசை செல்லப்பா மறைவு – அன்புமணி இரங்கல்



**சென்னை, ஏப்.29:** பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

தமிழீழ விடுதலைப் பாடகரும், பாட்டாளி மக்கள் கட்சியுடன் உறவு கொண்டவருமான பாடகர் தேனிசை செல்லப்பா உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியறிந்து அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

திருநெல்வேலி மாவட்டம் தென்காசி அருகிலுள்ள சிங்கிலிப்பட்டி கிராமத்தில் பிறந்த பாடகர் தேனிசை செல்லப்பா அவரது இளம் வயதில் நடிகவேள் எம்.ஆர். இராதா, நாம் தமிழர் கட்சியின் நிறுவனர் சி.பா. ஆதித்தனார் ஆகியோருடன் இணைந்து தமிழர் உரிமைக்கான பாடல்களை பாடி வந்தார்.

பின்னாளில் விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் அவர்களின் வேண்டுகோளை ஏற்று தமிழீழ விடுதலைப் பாடல்களைப் பாடத் தொடங்கினார். தேனிசை செல்லப்பாவின் எழுச்சிக் குரல் மீது விருப்பம் கொண்ட விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் அவருக்கு பாசறைப் பாணர் என்று பட்டம் வழங்கி சிறப்பித்தார்.

பாட்டாளி மக்கள் கட்சியின் மேடைகளிலும் ஏராளமான இசை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். பாட்டாளி மக்கள் கட்சிக்காக கவிஞர் பங்குனி உத்திரன் எழுதிய பாடலையும் தேனிசை செல்லப்பா பாடியுள்ளார்.

பாடகர் தேனிசை செல்லப்பா அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினர், நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தொடர்ந்து 2-வது ஆண்டாக இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சி - மிரட்டும் தமிழ்நாடு!



**சென்னை, ஏப்.29:** தமிழ்நாடு தொடர்ந்து இரண்டாவது நிதியாண்டாக இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது. சுமார் 14 ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ்நாடு தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் இரட்டை இலக்க வளர்ச்சியை எட்டியுள்ளது.

மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் வெளியிட்டுள்ள சமீபத்திய தரவுகளின்படி, 2025-26வது ஆண்டில் 10.83% என்ற பொருளாதார வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்துள்ளது. முந்தைய ஆண்டில் மாநிலத்தின் வளர்ச்சி விகிதம் 11.19% ஆக இருந்தது.

உத்தரப் பிரதேசம், கேரளா, பஞ்சாப் உள்ளிட்ட பல முக்கிய மாநிலங்களின் தரவுகள் இன்னும் வெளியிடப்படாத நிலையில், தற்போதைய நிலவரப்படி இந்தியாவிலேயே அதிக வளர்ச்சி விகிதத்தைக் கொண்ட மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்கிறது.

இந்தியாவின் அதிவேகப் பொருளாதார வளர்ச்சியை எட்டியது மட்டுமல்லாமல், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி ரூ.35.29 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.

முக்கியத் துறைகளில் ஏற்பட்ட வலுவான வளர்ச்சி மற்றும் வேளாண்மைத்துறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மீட்சியே இந்த வளர்ச்சிக்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது. மேலும் இந்த தரவுகளின்படி தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் தற்போது ரூ.4.08 லட்சம் ஆக உயர்ந்துள்ளது. இந்தியாவின் தேசிய சராசரி தனிநபர் வருமானம் ரூ.2.05 லட்சமாக உள்ள நிலையில், தமிழ்நாட்டின் வருமானம் அதைக் காட்டிலும் மிக அதிகமாக உள்ளது.

கர்நாடகாவின் தனிநபர் வருமானம் ரூ.4.33 லட்சமாக உள்ளநிலையில், தமிழ்நாடு நாட்டின் இரண்டாவது அதிக தனிநபர் வருமானம் கொண்ட மாநிலமாக உள்ளது.

## கும்மிடிப்பூண்டியில் விஷவாயு தாக்கி வடமாநில இளைஞர் உயிரிழப்பு - 4 பேர் கவலைக்கிடம்



**திருவள்ளூர், ஏப்.29:** திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி அடுத்த தேர்வாய்கண்டிகை சிப்காட் தொழிற்பேட்டையில் தனியாருக்கு சொந்தமான எத்தனால் தயாரிக்கும் தொழிற்சாலை இயங்கி வருகிறது. இந்த தொழிற்சாலையில் நேற்று மாலை 5 தொழிலாளர்கள் தண்ணீர் தொட்டியை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது எதிர்பாராத விதமாக விஷவாயு கசிந்து 5 பேருக்கும் மூச்சுத் திணறல் ஏற்பட்டது. உடனடியாக தொழிற்சாலை நிர்வாகம் அவர்களை மீட்டு மஞ்சங்கரணையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

ஆபத்தான நிலையில் இருந்த ஒடிசாவை சேர்ந்த தனஞ்செய மாலிக் (26) என்ற தொழிலாளியை மேல் சிகிச்சைக்காக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் வரும் வழியிலேயே அவர் உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த பாதிரிவேடு காவல்துறையினர் சடலத்தை கைப்பற்றி உடற்கூறு ஆய்விற்காக சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த சம்பவத்தில் மூச்சு திணறலுக்கு உள்ளான 4 தொழிலாளர்கள் தொடர்ந்து தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளனர். இந்த சம்பவம் குறித்து பாதிரிவேடு காவல்துறையினர் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தண்ணீர் தொட்டியை சுத்தம் செய்த போது விஷவாயு தாக்கி வட மாநில தொழிலாளி ஒருவர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## மானாமதுரையில் 70 ஆண்டுகள் கழித்து இரட்டை தேரோட்டம் இன்று நடைபெறுகிறது





**மானாமதுரை, ஏப்.29:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் மதுரையை போல் இங்கு உள்ள ஆனந்த வல்லி சோமநாதர் கோவில், வீர அழகர் கோவில் ஆகிய கோவிலில் 10 நாட்கள் திருவிழா நடைபெறும். வைகை ஆற்றில் இந்த திருவிழா நடைபெறும். சித்திரை திருவிழாவில் 70 வருடங்களுக்குப் பிறகு 2 பெரிய தேர்களில் மீண்டும் தேரோட்டம் நடைபெற உள்ள நிலையில் தேர் சுத் தம் செய்யும் பணி மற்றும் வண்ணமயமான சுவாமி படங்கள் வேலைப்பாடுகள் கொண்ட திரை சீலைகள் தோரணங்கள் கொண்டு அலங்காரம் செய்யப்பட்டு வருகிறது. நேற்று ஆனந்த வல்லி சோமநாதர் கோவில் திருகல்யாண நிகழ்ச்சி இரவு பூ பல்லாக்கு அதை தொடர்ந்து இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு இரட்டை தேரோட்டம் நடைபெறுகிறது.

கடந்த 70 வருடங்க ளுக்கு முன்பு சித்திரை திருவிழா தேரோட்டத்தின் போது சோமநாதர் சுவாமி யையும், ஆனந்தவல்லி அம்மனையும் தனித் தனி பெரிய தேர்களில் இழுத்து வந்த நிலையில் ஒரு பெரிய தேர் சேதம டைந்ததை தொடர்ந்து சில வருடங்களாக சுவாமி சோமநாதர் மட்டும் பெரிய தேரிலும், ஆனந்தவல்லி அம்மன் சிறிய தேரிலும் வலம் வந்தனர்.

கடந்த இந்நிலையில் 3 வருடங்களாக புதிதாக பெரிய தேர் செய்யும் பணி நடைபெற்று கடந்த 2 மாதங்களுக்கு முன்பு புதிய தேர் வெள்ளோட்டம் பெற்றது. இன்று ஏப். 29ம் தேதி நடைபெறும் தேரோட்டத்தின் போது மீண்டும் 2 பெரிய தேர்களில் சுவாமிவலம் வர உள்ளனர். மானாமதுரை நான்கு ரத வீதிகளில் மீண்டும் இரட்டை தேரோட்டம் இன்று நடைபெற இருப்பதால் பக்தர்கள் மற்றும் மானாமதுரை மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## மானாமதுரை வீர அழகர் கோவிலில் சித்திரைத் திருவிழா தொடங்கியது




**மானாமதுரை, ஏப். 28:** சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் வைகை ஆற்று கரையில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ ஆனந்த வல்லி அம்மன் சோமநாதர் கோவில், வீர அழகர் கோவில் உள்ளது. ஆண்டு தோறும் 10 நாட்கள் சித்திரை திருவிழா நடைபெறும். இந்த ஆண்டு சித்திரை திருவிழா ஆனந்த வல்லி சோமநாதர் கோவிலில் கடந்த 21 ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. இன்று 11 மணிக்கு ஆனந்த வல்லி சோமநாதர் திருக்கல்யாணம் நடைபெற்றது.

இதேபோல் வீர அழகர் கோவிலில் சுந்தரராஜ பெருமாளுக்கு காப்பு கட்டுதல் நிகழ்ச்சியுடன் சித்திரை திருவிழா தொடங்கியது. இந்தக் கோவிலில் மூலவர் சுந் தரராஜப் பெருமாள் எனும் நாமத் துடன் எழுந்தருளி அருள்பா லிக்கிறார்.

சித்திரைத் திருவிழா தொடக்கமாக நடைபெற்ற காப் புக் கட்டுதல் உத்ஸவத்தை முன் னிட்டு, கோவிலில் மூலவருக்கும் உத்ஸவருக்கும் திருமஞ்சனம் நடத்தப்பட்டு, தேவியர் சமேத மாக கோயில் முன்பாக உள்ள மண்டபத்தில் சுந்தரராஜப் பெரு மாள் எழுந்தருளினார்.

பின்னர், வீர அழகர் பல்லக் கில் புறப்பாடாகி மானாமதுரை நகராட்சி அலுவலகத்தில் அமைக் கப்பட்டிருந்த மண்டகப்படிக்கு எழுந்தருளினார். இரவு சர்வ அலங்காரம் செய்யப்பட்டு





சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வீர அழகரை வழிபாடு செய்தனர்.

திருவிழாவின் முக்கிய நிகழ் வாக வருகிற 30 -ஆம் தேதி இரவுவீர அழகர் எதிர்சேவையும், மறு நாள் மே 1 -ஆம் தேதி காலை 7 மணிக்கு அழகர் ஆற்றில் இறங் கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது .மே 2-ஆம் தேதி இரவு மானாம துரை கிராமத்தார் மண்டகப்படி யில் வைகை ஆற்றுக்குள் நிலாச் சோறு நிகழ்ச்சி நடைபெறுகிறது. தொடர்ந்து வரும் 6 ந்தேதி மானாமதுரை கடைவீதி முழுவதும் வீர அழகர் எழுந்தருளுவார் அன்று உற்சவம் ஸாந்தி நிகழ்ச்சியுடன் சித்திரை திருவிழா நிறைவடைகிறது.

## ஈரோடு கலெக்டர் அலுவலகத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்




**ஈரோடு ,ஏப்.29:** ஈரோடு கலெக்டர் அலுவலகம் பெருந்துறை சாலையில் இயங்கி வருகிறது. கலெக்டர் அலுவலகத்தில் பழைய கட்டிடத்தில் 7 தளங்களும், புதிய கட்டிடத்தில் 7 தளங்களும் உள்ளன. இங்கு பல்வேறு துறை சார்ந்த அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

எப்போதும் ஈரோடு கலெக்டர் அலுவலகம் மக்கள் கூட்டத்துடன் பரபரப்பாக காட்சியளிக்கும் குறிப்பாக திங்கட்கிழமை நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் முடியும் வரை கலெக்டர் அலுவலகம் பரபரப்பாக இயங்கி வரும்.

இந்நிலையில் கலெக்டர் அலுவலக இமெயிலில் மர்ம நபர் ஒருவர் கலெக்டர் அலுவலகத்தில் வெடிகுண்டு வைத்திருப்பதாக மிரட்டல் கொடுத்து மேல் அனுப்பியிருந்தார். இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த அலுவலக ஊழியர்கள் இதுகுறித்து உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர்

இதுகுறித்து தகவல் கிடைத்ததும் சூரம்பட்டி போலீசார் கலெக்டர் அலுவலகத்திற்கு விரைந்து வந்தனர். மேலும் வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்களும் விரைந்து வந்து தீவிர சோதனையில் ஈடுபட்டனர் வெடிகுண்டு தடுப்பு நாய் பவானியும் வரவழைக்கப்பட்டு சோதனை நடந்து வருகிறது.

பழைய கட்டிடத்தில் உள்ள கூட்டரங்கம், பதிவேடுகள் பாதுகாப்பு அறை, கலெக்டர் முகாம் அலுவலகம், பழைய கட்டிடத்தில் உள்ள அனைத்து அலுவலகம் புதிய கட்டிடத்தில் உள்ள கார் பார்க்கிங் பகுதி புதிய கட்டிடத்தில் உள்ள கூட்ட அரங்கம் மாவட்ட வருவாய் நேர்முக உதவியாளர் அலுவலகம் என அனைத்து இடங்களிலும் அங்குலம் அங்குலமாக மெட்டல் டிடெக்டர் கருவிகளைக் கொண்டு வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்களும் போலீசாரும் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் கலெக்டர் அலுவலகம் பரபரப்பாக காட்சியளித்து வருகிறது. நேற்று காலை பணிக்கு வந்த ஊழியர்கள் அலுவலகத்திற்குள் செல்லாமல் வெளியே பரபரப்புடன் நின்று கொண்டிருந்தனர். தொடர்ந்து போலீசாரும் வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்களும் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழ்நாடு என்றாலே சாதனை! சாதனை! சாதனை!- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



**சென்னை , ஏப்.29:** முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

தமிழ்நாடு என்றாலே சாதனை! சாதனை! சாதனை!

திராவிட மாடல் தனித்துவமான மாடல்!


சொன்னதை, எண்களிலும் நிரூபித்துக் கொண்டிருக்கிறோம்!

முதல் மூன்றாண்டுகளில் அடித்தளம் அமைத்து, இப்போது தொடர்ந்து இரண்டாண்டுகளாக இரட்டை இலக்க வளர்ச்சி என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளோம். சிறப்பான நமது நிர்வாகத்திற்கு, உழைப்பால் துணை நின்ற தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி!

இது தொடக்கம்தான். உங்கள் துணையோடு இன்னும் பல உயரங்களை அடைவது உறுதி!

நம்முடைய போட்டி என்பது மற்ற இந்திய மாநிலங்களுடன் அல்ல; தெற்காசியாவில் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு உயர வேண்டும்! என்று கூறியுள்ளார்.

## குமாரபாளையத்தில் 16 வயது சிறுமியை கர்ப்பமாக்கிய பெரியப்பா- போலீசார் விசாரணை



**சேலம், ஏப்.29:** குமாரபாளையம் தனியார் தியேட்டர் அருகே வசிக்கும் 16 வயது சிறுமி சமீபத்தில் மேற்கு வங்காளம் சென்று வந்தார். இவருக்கு திடீரென உடல்நிலை சரியில்லாததால் குமாரபாளையம் அருகே ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பெற்றோர் அழைத்து சென்றனர்.

அப்போது சிறுமி கர்ப்பமாக உள்ளார் என்று டாக்டர் கூறினார். இது பற்றி அந்த சிறுமியிடம் கேட்ட போது தனது வீட்டில் வேலை செய்யும் பெரியப்பா முறையுள்ள நபர் ஒருவர் தன்னை பாலியல் வன்கொடுமை செய்ததாகவும், அதன்பின் இது பற்றி யாரிடமும் சொல்லக்கூடாது என மிரட்டி மீண்டும் பாலியல் வன்கொடுமை செய்ததாகவும் பெற்றோரிடம் தெரிவித்தார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த சிறுமியின் பெற்றோர் இது குறித்து குமாரபாளையம் போலீசில் புகார் கொடுத்தனர். அதன் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து சம்பந்தப்பட்ட நபரை தேடி வருகின்றனர்.

## சேலத்தில் இருந்து திருவண்ணாமலைக்கு சிறப்பு பஸ்கள் இயக்கம்



**சேலம், ஏப்.29:** தமிழ் மாதங்களில் வரும் பவுர்ணமி நாளில் திருவண்ணாமலையில் பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் செல்கின்றனர். அவ்வாறு அங்கு செல்லும் பக்தர்களின் வசதிக்காக தமிழக அரசு போக்குவரத்து கழகம் சார்பில் சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன. இந்த சிறப்பு பஸ்கள் சென்னை, வேலூர், திருத்தணி, காஞ்சிபுரம், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, சிதம்பரம், விழுப்புரம், ஓசூர் மற்றும் பெங்களூருவில் இருந்து திருவண்ணாமலைக்கு இயக்கப்படுகின்றன.

இந்நிலையில் சித்ரா பவுர்ணமி வருகிற 1-ந்தேதி வருகிறது. இதையொட்டி நாளை மறுநாள் முதல் மே 2-ந்தேதி இரவு வரை கிரிவலம் செல்லும் பக்தர்களின் வசதிக்காக சேலம் கோட்டம் சார்பில் சேலம், ஆத்தூர், தர்மபுரி, ஓசூர், கிருஷ்ணகிரி, பெங்களூரு ஆகிய பகுதிகளில் இருந்து திருவண்ணாமலைக்கு சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன. முன்பதிவு பயணிகள் வசதிக்காக திருவண்ணாமலைக்கு இயக்கப்படும் சிறப்பு பஸ்களுக்கு 30-ந்தேதி முதல் 1 மணி நேரத்திற்கு ஒரு பஸ் வீதம் இயக்கப்படுகின்றன. அவற்றிற்கு பயணிகள் முன்பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சேலம், தர்மபுரி மற்றும் ஓசூர் பஸ் நிலையங்களில் இருந்து திருவண்ணாமலைக்கு செல்ல முன்பதிவு செய்யப்படுகிறது. எனவே பயணிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி கூட்ட நெரிசலை தவிர்க்குமாறு சேலம் கோட்ட அரசு போக்குவரத்துக்கழக மேலாண்மை இயக்குனர் குணசேகரன் தெரிவித்துள்ளார்.

## புதுச்சேரியில் இருந்து மது கொண்டு வந்ததாக தொடரப்பட்ட வழக்கு ரத்து உயர் நீதிமன்றத்தில் அரசு முறையீடு



**புதுச்சேரி, ஏப்.29:** புதுச்சேரியில் இருந்து மதுபானம் கொண்டு வந்ததாக தொடரப்பட்ட வழக்கை ரத்து செய்யக் கோரி கடலூரைச் சேர்ந்த வல்லரசு என்பவர் தாக்கல் செய்த மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், தனிநபர் ஒருவர் 4.5 லிட்டர் மதுபானம் வைத்திருக்கலாம் என்ற அரசாணையைச் சுட்டிக்காட்டி, அவர்மீதான வழக்கை ரத்து செய்தது.

இதையடுத்து, புதுச்சேரியில் இருந்து 4.5 லிட்டர் அளவுக்கு மதுபானம் கொண்டு வர உயர் நீதிமன்றம் அனுமதித்துள்ளதாக, சமூக வலைதளங்களில் செய்தி பரவியது.

இந்த நிலையில், இந்த உத்தரவு குறித்து விளக்கம் அளிக்க கோரிய மனுவை நாளை விசாரணைக்கு எடுக்கக் கோரி, தமிழ்நாடு அரசின் தலைமை குற்றவியல் வக்கீல் அசன் முகமது ஜின்னா, உயர் நீதிமன்ற நீதிபதி எம். நிர்மல்குமார் முன் முறையீடு செய்தார்.

## திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு

**PREMIUM PLOT SALE**
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1

- Location: (Nr Mylapore Jn)
- Direction: N/ Face
- Total Area: 2400 sft
- Price: RS.650/sft

LIMITED PLOTS AVAILABLE!

Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner
www.vgpdevelopers.com

## டீலர்கள் தேவை
## மைலேஜ் பூஸ்டர்
**20% ~ 30%**
மிக அதிகமான மைலேஜ் குறைந்த புகை சுலபமான வாகன ஓட்டம் குறையும் மாசு
நேரடி விற்பனையாளர்களும் டீலராகலாம்
Manufactured By: Dlag Technologies, Chennai 33
போன் 63746 73041

## நிலம் தேவை
### தெற்கு சென்னை
திருப்போரூர் to செங்கல்பட்டு ரோடு
**1 to 2 ஏக்கர்**
தொடர்புக்கு:
Ph. 6384617773

## நிலம் தேவை
### தெற்கு சென்னை
சென்னை
திருப்போரூர்
செங்கல்பட்டு
1 - 2 ஏக்கர்
திருப்போரூர்-செங்கல்பட்டு ரோடு
உடனடி தேவை!
தொடர்புக்கு
Ph: 6384617773

## Annai Violet Arts & Science College
Seek Strive Succeed
(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)

Key Features: Modern Infrastructure | Extensive Library; Expert Faculty | Result-Oriented Curriculum; Well-Equipped Labs | Competitive Exam Preparation; Sports & Skill Development | English Training; Prime Location | Strong Security; Seminar Hall | Personalized Student Support; Inter-College Competitions | Scholarships; Counseling & Mentoring | Industrial Visits; Interactive Learning | Strong Placement Support; Community Radio Station

Regional centre for ICMAI (Institute of Cost Accountants of India) Foundation / Intermediate
BANK LOAN AVAILABLE
Media & Broadcasting Courses Available. RJ / VJ Training given to Students
Free Transportation for Girl Students from Pattaravakkam Railway Station & Kallikuppam to College

UG & PG COURSES

SHIFT I: B.C.A, B.B.A, B.Sc COMPUTER SCIENCE, B.Sc BIOCHEMISTRY, B.Sc MICROBIOLOGY, B.A TAMIL, B.A ENGLISH, B.A ECONOMICS, B.COM (GENERAL), B.COM (ACCOUNTING & FINANCE), B.COM (CORP. SECRETARYSHIP), M.A ENGLISH, M.COM, M.Sc BIOCHEMISTRY

SHIFT II: B.Com (GENERAL), B.Com (ISM), B.Sc PHYSICS, B.Sc CHEMISTRY, B.Sc COMPUTER SCIENCE, B.Sc VISUAL COMMUNICATION, M.Sc COMPUTER SCIENCE, M.Sc MICROBIOLOGY

CERTIFICATE COURSE: DIP. IN MEDICAL LAB TECHNOLOGY (DMLT), CERTIFICATE COURSE IN MEDICAL CODING, PHOTOSHOP, COREL DRAW, TALLY PRIME

UNIVERSITY OF MADRAS - INSTITUTE OF DISTANCE EDUCATION LEARNING SUPPORT CENTRE
ADMISSIONS OPEN
Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388
No.53, Violet College Road, Menambedu, Ambattur, Chennai - 53.
info@violetcollege.in | www.violetcollege.in

## WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
- HOUSEKEEPING STAFF (Male & Female)
- MARKETING EXECUTIVE - ELECTRICAL FIELD (Male & Female)
- ELECTRICIAN & HELPERS (Weekly / Monthly Wages)
- ELECTRICAL SUB-CONTRACTOR
- DRIVER

GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!

## சிங்கபெருமாள்கோயில்
S.P கோயில். On. GST Road
**2 ஏக்கர் விற்பனை**
1 ஏக்கர் 25cr
வண்டலூர் கேளம்பாக்கம் ரோடு
**17 ஏக்கர் விற்பனை**
1 acre 16 cr
Ph. 9566055082

## எலாவூர் மிக அருகில்
சுண்ணாம்பு குளம்
**Sqft ₹120/_**
(மினிமம் 10000sqft)
Ph.9600660997

உ
முருகன் துணை
## A.S.R ரியல் எஸ்டேட்
காஞ்சிபுரம்
சுலப தவணை உள்ள வீட்டு மனைகள் வாங்க, விற்க மற்றும் பட்டா மாறுதல் பெயர் மாற்றம் செய்து தரப்படும்.
காஞ்சிபுரம், செய்யாறு உள்ள வீட்டு மனைகள் மற்றும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும்
அணுகவும்
7305025591,9578622711

GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும்
சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE ரூபாய் ₹ 1.80 லட்சம்
800 SQFT
FREE FREE!!! 10 கிராம் GOLD COIN சேமியுங்கள்
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118

அகிலாண்டேஸ்வரி நகரில் வீட்டு மனைகள் உள்ளது
மனை அளவு = 30x40 = 1200 ச.அடி
மனை விலை 1,20,000/- மட்டும்
Cell :7305025591
இடம்: பத்தமடை உள்ளது திருநெல்வேலி மாவட்டம்
LOCATION

திருமுடிவாக்கம் அருகாமையில் அமைந்துள்ள சாரதா கம்பெனிக்கு
## ஆட்கள் தேவை
ஆண்கள் மட்டும்
வயது: 18 முதல் 35 வரை
கல்வி தகுதி
10 முதல் any Degree
தங்கும் இடம் உணவு வசதி உண்டு
ESI , PF , Attendance Allowance போன்ற அனைத்து வசதிகளும் உண்டு
சம்பளம் :
18,000 முதல் 22,000 /-
தொடர்புக்கு :
9962400330 , 9962400319 , 9962400336
மெயில் : hrsarathagroup@gmail.com

துபாயை தலைமையிடமாகக் கொண்டு தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள உட்-பி குளோபல் பிரைவேட் லிமிடெட் (Would Be Global Pvt Ltd) ஆன்-லைன் வர்த்தக E-Commerce நிறுவனத்திற்கு தாலுக்கா வாரியாக பிரான்ச்சீஸ்கள் (Franchise) தேவை.
பொது மேலாளர்:
7092069555 / 7092047555

just499
## MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary, Unilevel, Matrix, Board, Generation, ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

SADHANA DEVI.K
THE BEST CENTRE OF CAR WASH
## SUPREME
Car Wash & Detailing
- Car Foam Pressure Wash
- Teflon Coating
- Ceramic Wax Treatment
- Under Chassis Painting
- Interior Foam Wash / Stain Remover
- Paint Correction / Protection

We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

## WANTED
## OFFICE BOY
GUINDY
CALL US
7550093245 / 7358696451

அருள்தரும் தெய்வம்
தமிழ் மாதமிருமுறை இதழ்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com

## WANTED
- LAB HELPER
- OFFICE BOY
- GARDENER

CHEMBARAMBAKKAM
CALL US
7550093245 / 7358696451



## கவிதை அரங்கம்!



காதலில் தோற்பது என்பது பிரிவல்ல, ஒருவரை நினைத்து வாழ்நாள் முழுவதும் வாழ்வது.


நீ ஒரு நதி என்றால், நான் உன்னோடு சங்கமிக்கும் கடல்.

உன் வார்த்தைகள் ஒவ்வொன்றும் எனக்குப் புது தெம்பைத் தருகின்றன.

உன்னை நினைக்கும் போது மட்டும் தான் என் இதயம் உண்மையாகத் துடிக்கிறது.

காலங்கள் மாறலாம்,
காட்சிகள் மாறலாம்,
ஆனால் உன் மீதான என் காதல் மாறாது.

## வாழ்க்கை தத்துவம்...



வாழ்க்கை நெறிகள்

உண்மை பேசுவது கடினம், ஆனால் அது தரும் நிம்மதி அலாதியானது.

நீ எதை விதைக்கிறாயோ அதையே அறுவடை செய்வாய்.

பிறர் துன்பத்தை உன் துன்பமாகக் கருது.

இன்று என்பது உனக்குக் கிடைத்த ஒரு பரிசு.

வாழ்க்கை ஒரு வட்டம்; மேலே இருப்பவன் கீழே வருவான், கீழே இருப்பவன் மேலே போவான்.

தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்த்தால் நிம்மதி பெருகும்.

## அனுசரிப்பு

கலாவதி டீச்சர் காலை நடைப்பயணத்தில். வேகமாக அந்த கட்டுமான பகுதியை கடந்து கொண்டிருந்தபோது, அவள் கண்ணில் பட்டாள் ரஞ்சிதம். டீச்சரைக் கண்டதும் சற்றே பின்னுக்கு நகர்ந்தவள் கட்டுமான பகுதியில் மறைந்து நின்றாள். எதிர்பாராமல் தோளைத் தட்டி' ரஞ்சிதம்! இங்கே என்ன வேலை, உனக்கு?' என்று கேட்ட கலாவதி டீச்சர் கேட்டதும் ரஞ்சிதம் பயத்தால் வெலவெலத்து நின்றாள்.' இல்லீங்க டீச்சர்! என்று ஏதோ சொல்ல வந்தவளை ' ஏய்! ரஞ்சிதம்! யாரோடு வம்பு பேசிட்டு இருக்கே? வேகமா இங்க வந்து சோலியை பாரு! இல்லேன்னா; வீட்டுக்குப் போயிடு. நான் பூவாயைக் கூப்பிட்டுக்கிறேன்.' என்று மேஸ்திரி செல்வராசு காட்டுக் கத்தாக கத்தவும்; 'நான் வரேன் டீச்சர்!' என்று சொல்லி சிட்டாய் பறந்தாள். கலாவதி டீச்சர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, வேலைக்காக கட்டியிருக்கும் மூங்கில் சார்ப்பு ஏணிமேல் தலைச்சுமையாக செங்கற்களை சுமந்து சென்று கொண்டிருந்தவள்; டீச்சரின் பார்வையைத் தவிர்த்தது, வெளிப்படையாகத் தெரிந்தது. இனியும் இங்கு நிற்பதில் எந்த ஒரு பயனும் இல்லை; என்பதை உணர்ந்த கலாவதி டீச்சர்,அங்கிருந்து கிளம்பினாள்.அடுத்த இரண்டு நாட்களிலும் ரஞ்சிதம் , கட்டுமான தில் வேலை பார்ப்பதை கண்டும், காணாதது போல் இருந்தாள். அவளால் வேறு என்னதான் செய்ய முடியும்? திங்கள் கிழமை காலை வழக்கம் போல் ரஞ்சிதம் பள்ளிக்கு வந்ததைப் பார்த்து நிம்மதி அடைந்தாள். மதிய உணவு இடைவேளையில் ரஞ்சிதம் தயங்கியபடியே அவளிடம் வந்தாள். ' என்ன; என்பது போல் கலாவதி டீச்சர் அவளைப் பார்க்க, ' என்னை மன்னிச்சிடுங்க டீச்சர். அன்னிக்கு நீங்கள் பேசிக் கொண்டிருந்தபோதே நான் வேலைக்கு செல்லும்படி நேர்ந்துவிட்டது. என் வீட்டின் நிலைமை இப்படித்தான் இருக்கும் போது என்னால் என்ன செய்ய முடியும்? வீட்டை அனுசரிப்பதும் முக்கியம்தானே' என்றாள். 'அது சரி! பதினெட்டு வயதிற்கு மேற்பட்டவர்களைத் தான் வேலைக்கு அமர்த்த முடியும்; என்ற அரசாணையை மீறுதல் ஆகாதா?' என்றவளைப் பார்த்து வறண்ட சிரிப்பொன்றை உதிர்த்தவள்' டீச்சர்! கைநாட்டு இட்டு கூலி வாங்குவது என் அம்மா செங்கமலம். வாரம் இரண்டு நாட்களாவது அவர்களுக்கு கொஞ்சமாவது ஓய்வு இருந்தால் தான் வார நாட்களில் அவர்களால் வேலை செய்ய முடியும். வீட்டுக்கு வரும் வரும்படியும் குறையாமல், என் படிப்பும் கெடாமல், இருக்க மேஸ்திரி செல்வராசு எங்களுக்கு உதவியாகத்தான் இந்த ஏற்பாட்டை செய்திருக்கிறார். நீங்கள் எங்காவது பிராது கொடுத்து விடாதீங்க. காரியம் கெட்டுவிடும் . பெரிய மனசு வைக்க, உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்' என்றாள். குழந்தை தொழிலாளர்களை ஒழிப்பது, இந்த தலைமுறையால் இயலாது; என்பதைப் புரிந்து கொண்டாள் கலாவதி டீச்சர். ரஞ்சித்தின் நிலைமையை அவளும் அநுசரிக்கத் தானே வேண்டியுள்ளது!



சசிகலா விஸ்வநாதன்



## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

*கேள்வி: ஒருத்தன் 10 மாடி பில்டிங் மேல இருந்து குதிச்சான். ஆனா அவனுக்கு எதுவுமே ஆகல. எப்படி?*

*பதில்: ஏன்னா, அவன் 'பாதுகாப்பான' பில்டிங் மேல இருந்து குதிச்சான்!*



## தினம் ஒரு சமையல்



### காய்கறி சாதம்

தேவையான பொருட்கள்:


பாஸ்மதி அல்லது பொன்னி அரிசி - 1 கப்
நறுக்கிய காய்கறிகள் (கேரட், பீன்ஸ், பட்டாணி, உருளைக்கிழங்கு) - 1 கப்
வெங்காயம், தக்காளி - தலா 2
இஞ்சி பூண்டு விழுது - 1 ஸ்பூன்
பட்டை, கிராம்பு, ஏலக்காய் - தாளிக்க

செய்முறை:



குக்கரில் எண்ணெய் அல்லது நெய் ஊற்றி பட்டை, கிராம்பு தாளிக்கவும்.
வெங்காயம், இஞ்சி பூண்டு விழுது சேர்த்து பொன்னிறமாக வதக்கவும்.
தக்காளி மற்றும் காய்கறிகளைச் சேர்த்து வதக்கி, தேவையான அளவு உப்பு, மிளகாய்த்தூள் சேர்க்கவும்.
ஒரு கப் அரிசிக்கு 2 கப் தண்ணீர் ஊற்றி, அரிசியைச் சேர்த்து 2 விசில் விட்டு இறக்கவும்.

## இலவம் பயன்கள்



இலவம் பஞ்சு மரம் (SILK COTTON TREE) அதன் மருத்துவ குணங்களுக்காகவும், பொருளாதாரப் பயன்களுக்காகவும் நீண்ட காலமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இலவம் மரத்தின் பல்வேறு பாகங்கள் தரும் பயன்கள் இதோ:

1. இலவம் பஞ்சு (FIBER)

தலையணை மற்றும் மெத்தைகள்: இலவம் பஞ்சு மிகவும் மென்மையானது மற்றும் வெப்பத்தை கடத்தாதது. இதில் தூங்குவது கழுத்து வலி மற்றும் உடல் சூட்டைத் தணிக்கும்.
ஒவ்வாமை இல்லாமை: இது இயற்கையானது என்பதால், ஆஸ்துமா அல்லது தோல் ஒவ்வாமை (ALLERGY) உள்ளவர்களுக்கு இது மிகவும் பாதுகாப்பானது.

2. மருத்துவப் பயன்கள் (MEDICINAL USES)

இலவம் பிசின்: இலவம் மரத்திலிருந்து கிடைக்கும் பிசின் தீராத வயிற்றுப்போக்கு மற்றும் சீதபேதியைக் குணப்படுத்தும் தன்மை கொண்டது. இது ஒரு சிறந்த 'துவர்ப்பி' (ASTRINGENT) ஆகச் செயல்படுகிறது.
நீரிழிவு நோய்: இலவம் மரத்தின் வேர் மற்றும் பட்டை பொடி நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த நாட்டு மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது.
எலும்பு ஆரோக்கியம்: இதன் இலைகள் மற்றும் பூக்கள் எலும்புகளுக்கு வலிமை சேர்க்கும் குணம் கொண்டவை.
முகப்பரு: இலவம் மரத்தின் முட்களைப் பசும்பால் விட்டு அரைத்து முகப்பருக்கள் மீது தடவினால், தழும்புகள் இன்றி பருக்கள் மறையும்.

3. இலை மற்றும் பூக்களின் பயன்கள்

உடல் சூடு: இதன் இலைகளை அரைத்து குளிக்கும்போது உடலில் தேய்த்துக் குளித்தால் உடல் சூடு குறையும்.
பூக்கள்: இதன் பூக்கள் சிறுநீரகம் தொடர்பான கோளாறுகளைச் சரிசெய்யும் மருந்துகளில் பயன்படுத்தப்படுகின்றன.

முக்கியக் குறிப்பு:
இலவம் மரத்தின் வேர் அல்லது பட்டையை மருத்துவத்திற்காகப் பயன்படுத்தும் போது, தகுந்த சித்த மருத்துவர் அல்லது ஆயுர்வேத நிபுணரின் ஆலோசனையைப் பெறுவது அவசியமாகும்.

பொதுவான பயன்கள்:
தீப்பெட்டித் தொழில்: இலவம் மரம் லேசானது என்பதால் தீக்குச்சிகள் மற்றும் தீப்பெட்டிகள் தயாரிக்கப் பயன்படுகிறது.
நிழல் மற்றும் காற்று: இம்மரம் மிக உயரமாக வளர்வதால் நல்ல நிழலையும், தூய்மையான காற்றையும் வழங்குகிறது.

## மைக்கேல் திரைப்படம் இந்தியாவில் மட்டும் இத்தனை கோடி வசூல் செய்துள்ளதா!! அடேங்கப்பா



நடனம் என சொன்னாலே அனைவருக்கும் உடனடியாக நினைவுக்கு வருவது மைக்கேல் ஜாக்சன் என்கிற நபர்தான். உலகம் முழுக்க தனது நடனத்தால் பல கோடி பேர்களை ஆடவைத்துள்ளார்.

உலகளவில் நடனத்தின் மூலம் பல சாதனைகளையும் படைத்துள்ளார். மக்களின் மனதை வென்றவர்களின் வாழ்க்கையை மையமாக வைத்து திரைப்படங்கள் உருவாகும். எம். எஸ். தோனி, சச்சின், காந்தி போன்ற திரைப்படங்களை இதற்கு உதாரணமாக கூறலாம்.

அந்த வரிசையில் தற்போது வெளிவந்துள்ள திரைப்படம்தான் மைக்கேல். நடனத்தின் கடவுள் என ரசிகர்களால் அழைக்கப்படும் மைக்கேல் ஜாக்சனின் வாழ்க்கையை மையமாக வைத்து உருவாக்கப்பட்டு வெளிவந்துள்ள திரைப்படம் மைக்கேல்.

கடந்த 24ஆம் தேதி வெளிவந்த இப்படம் மக்கள் மத்தியில் அமோக வரவேற்பை பெற்று வருகிறது. இதுவரை உலகளவில் இப்படம் ரூ. 1450 கோடிக்கும் மேல் வசூலித்துள்ள நிலையில், இந்தியாவில் செய்துள்ள வசூல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, இதுவரை இந்தியாவில் மட்டுமே ரூ. 19 கோடிக்கும் மேல் வசூலித்துள்ளது. இது இப்படத்திற்கு இந்தியாவில் கிடைத்துள்ள நல்ல வரவேற்பாகும் என்பது குறிப்பிடத்தக்கது.



சினிமா

ஸ்டன்னிங் கிளாமர் லுக்கில் நடிகை வாமிகா கேபி வெளியிட்டுள்ள போட்டோஷூட் படு வைரலாகி வருகிறது. இதோ புகைப்படங்கள்:

## அம்மனால் என் வாழ்க்கை மாறியது.. ஸ்ருதி ஹாசன் ஓபன் டாக்



இந்திய சினிமாவில் திறமையான நடிகைகளில் ஒருவர் ஸ்ருதி ஹாசன். இவர் தனது சிறு வயதில் இருந்தே நடித்து வருகிறார். தமிழில் சூர்யா நடிப்பில் வெளிவந்த 7ஆம் அறிவு படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமானார்.

தொடர்ந்து தனுஷ், விஜய், அஜித் என பல முன்னணி நட்சத்திரங்களுடன் இணைந்து நடித்து வந்தார். இவர் நடிப்பில் கடந்த ஆண்டு கூலி படம் வெளிவந்தது. இப்படத்தில் முதல் முறையாக ரஜினியுடன் இணைந்து நடித்திருந்தார்.

இந்த நிலையில், நடிகை ஸ்ருதி ஹாசன் சமீபத்திய பேட்டி ஒன்றில் வாராஹி அம்மன் குறித்து பேசியது இணையத்தில் வைரலாகி வருகிறது.


"சமீபத்தில் தான் வாராஹி அம்மன் என் வாழ்வில் வந்தாங்க, நம்ம மட்டும் இல்ல, கடவுள்களும் நம்மை தேர்தெடுகிறார்கள். என் நண்பன் என்னிடம் 'நீ கொஞ்சம் வித்தியாசமா இருக்க வா கோயிலுக்கு போயிட்டு வரலாம்'-னு கூப்பிட்டாரு, சின்ன கோவில்தான், ஆனால் உள்ளே போனதும் உண்மையான பக்தியை உணர்ந்தேன். ஆடம்பரம் இல்லை, VIP வரிசை இல்லை; சக்தி வாய்ந்த ஒரு தெய்வமா இருக்காங்க" என கூறினார்.

























## WANTED

**ELECTRICIAN SUPERVISOR / ELECTRICIAN**

EGMORE, MOUNT ROAD

CALL US
7550093245 / 7358696451



PRGI No. TNBIL/25/A1569
வைகறையில் பேப்பர்பாய்
சென்னை புதன்கிழமை 29.04.2026

# திருப்பதி கோவிலில் ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3.27 கோடி



**திருப்பதி, ஏப்.29:**

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். விடுமுறை மற்றும் விசேஷ தினங்களில் பக்தர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். இலவச தரிசனத்தில் பல மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்கின்றனர்.

இந்த நிலையில், திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று முன்தினம் 80 ஆயிரத்து 350 பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். 36 ஆயிரத்து 597 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர். அன்று தேவஸ்தானம் அறிவித்த ஒருநாள் உண் டியல் காணிக்கை ரூ.3 கோடியே 27 லட்சம் ஆகும்.

# இந்தியா - நியூசிலாந்து வர்த்தக ஒப்பந்தம், வளமான எதிர்காலத்திற்கு வழிவகுக்கும்: பிரதமர் மோடி



**புதுடெல்லி, ஏப்.29:**

இந்தியா - நியூசிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இன்று கையெழுத்தாகியுள்ளது. டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் மற்றும் நியூசிலாந்து வர்த்தக அமைச்சர் டாட் மெக்லே ஆகியோர் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இதுகுறித்து பிரதமர் மோடி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார் அதில் தெரிவித்திருப்பதாவது:-

"இன்று கையெழுத்திடப்பட்ட இந்தியா-நியூசிலாந்து தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், நமது வளர்ச்சிக் கூட்டாண்மைக்கு முன்னெப்போதும் இல்லாத உத்வேகத்தை அளிக்கும் என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இது நமது இரு நாடுகளையும் பிணைக்கும் ஆழ்ந்த நம்பிக்கை மற்றும் இலட்சியத்தைப் பிரதிபலிக்கிறது.

இந்த ஒப்பந்தம் நமது விவசாயிகள், இளைஞர்கள், பெண்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், கைவினைஞர்கள், புத்தொழில் நிறுவனங்கள், மாணவர்கள் மற்றும் புதுமையாளர்களுக்குப் பெரிதும் பயனளிக்கும். இது வளர்ச்சிக்குப் புதிய வழிகளைத் திறந்து, வாய்ப்புகளை உருவாக்கி, பல்வேறு துறைகளில் நமது ஒருங்கிணைப்பை ஆழப்படுத்தும்.

நியூசிலாந்தின் 20 பில்லியன் டாலர் முதலீட்டு உறுதிப்பாடு, விவசாயம், உற்பத்தி, புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் நமது ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தி, இரு நாடுகளுக்கும் வளமான மற்றும் ஆற்றல்மிக்க எதிர்காலத்திற்கு வழிவகுக்கும்" இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மருத்துவ உலகில் மற்றுமொரு அதிசயம்: இரு கைகளை இழந்த பெண்ணுக்கு கிடைத்த மறுவாழ்வு





**புதுடெல்லி, ஏப்.29:**

டெல்லியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில், மருத்துவ வரலாற்றில் மிகச் சிக்கலான "இரு கை மாற்று அறுவை சிகிச்சை"வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

வைக்கோல் வெட்டும் இயந்திரத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில், ஒரு பெண் தனது இரண்டு கைகளையும் இழந்து தவித்தார்.

தனது அன்றாடத் தேவைகளுக்காகக் கூட மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட அவருக்கு, மருத்துவத் தொழில்நுட்பமும் மனிதநேயமும் கைகோர்த்துப் புதிய நம்பிக்கையை அளித்துள்ளன.

மூளைச்சாவு அடைந்த ஒருவரின் குடும்பத்தினர் முன்வந்து கைகளைத் தானம் செய்தனர். இதனைத் தொடர்ந்து, மருத்துவ நிபுணர்கள் அடங்கிய குழுவினர் சுமார் 12 மணிநேரம் தொடர்ச்சியாகப் போராடி, அந்தப் பெண்ணுக்குப் புதிய கைகளைப் பொருத்தி சாதனை படைத்துள்ளனர்.

நீண்ட போராட்டத்திற்குப் பிறகு அந்தப் பெண்ணுக்குப் புதிய கைகள் பொருத்தப்பட்டுள்ளன. தற்போது அவர் நலமுடன் இருப்பதாகவும், விரைவில் தனது பணிகளைத் தானே செய்யும் நிலைக்குத் திரும்புவார் என்றும் மருத்துவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இந்த சாதனையைப் படைத்த மருத்துவக் குழுவினருக்குப் பல்வேறு தரப்பிலிருந்தும் பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

# சிக்கன் பிரியாணிக்கு பிறகு தர்பூசணி சாப்பிட்ட ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் பரிதாப சாவு





**மும்பை, ஏப்.29:**

மராட்டிய மாநிலம் மும்பை பைதோனி பகுதியில் உள்ள முகல் கட்டிடத்தில் வசித்து வந்தவர் அப்துல்லா (வயது 40). இவரது மனைவி நஸ்ரீன் (35). இவர்களுக்கு ஆயிஷா (16), ஷைனப் (13) ஆகிய மகள்கள் இருந்தனர். கடந்த சனிக்கிழமை அப்துல்லா வீட்டுக்கு உறவினர்கள் 5 பேர் வந்து இருந்தனர். எனவே இரவு 10.30 மணியளவில் அப்துல்லா குடும்பத்தினர் உறவினர்களுடன் சிக்கன் பிரியாணி சாப்பிட்டனர்.

உறவினர்கள் சென்றபிறகு அப்துல்லா குடும்பத்தினர் நள்ளிரவு 1 மணி அளவில் தர்பூசணி பழம் சாப்பிட்டனர். இந்தநிலையில் நேற்று முன்தினம் அதிகாலை 5.30 மணியளவில் அவரது குடும்பத்தை சேர்ந்த 4 பேருக்கும் திடீரென உடல்நல பாதிப்பு ஏற்பட்டது. அவர்கள் வாந்தி, வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்டனர். உடனடியாக அவர்கள் அருகில் உள்ள குடும்ப டாக்டரிடம் சிகிச்சை பெற்றனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக அவர்கள் ஜே.ஜே. ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். இதில் அன்று காலை 10.15 மணியளவில் அப்துல்லாவின் கடைசி மகள் ஷைனப் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதையடுத்து அடுத்த சில மணி நேரங்களில் அப்துல்லாவின் மனைவி மற்றும் மூத்த மகளும் உயிரிழந்தனர். இரவில் அப்துல்லாவும் பரிதாபமாக உயிரிழந்தார். அப்துல்லா குடும்பத்தினருடன் சிக்கன் பிரியாணி சாப்பிட்ட உறவினர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது. சிக்கன் உணவை சாப்பிட்ட பிறகு நள்ளிரவில் தர்பூசணி சாப்பிட்ட நிலையில் அப்துல்லா குடும்பத்தினர் 4 பேரும் அடுத்தடுத்து உயிரிழந்து உள்ளனர். தர்பூசணி விஷத் தன்மையாக மாறியதால் இந்த துயரம் நேர்ந்து இருக்கலாம் என்று கூறப்படுகிறது. இருப்பினும் பிரேத பரிசோதனை அறிக்கைக்கு பிறகு அவர்களின் மரணத்துக்கான காரணம் தெரியவரும் என போலீசார் தெரிவித்தனர். இந்த சம்பவம் குறித்து ஜே.ஜே. மார்க் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தெலுங்கானா: 10 ரூபாய்க்கு குழம்பு தர மறுத்ததால் ஓட்டல் ஊழியர்களுக்கு சரமாரி வெட்டு

**தெலுங்கானா, ஏப்.29:**

தெலுங்கானா மாநிலத்தின் சங்காரெட்டி மாவட்டத்தில் உள்ள அம்பேத்கர் காலனியை சேர்ந்தவர் ஜீவரத்தினம். சனிக்கிழமை இரவு அர்.சி. புரத்திலுள்ள வட்டாட்சியர் அலுவலகத்திற்கு எதிரே உள்ள உணவகத்திற்கு சென்றுள்ளார். அங்கு தனக்கு 10 ரூபாய்க்கு குழம்பு கேட்டுள்ளார். ஆனால் அங்கிருந்த ஊழியர்களான உதய் (27) மற்றும் அஜய் (19) ஆகிய சகோதரர்கள், குறைந்தபட்ச விலையே 20 ரூபாய் தான் என்று கூறி குழம்பு தர மறுத்துள்ளனர்.

இதனால் ஊழியர்களிடம் ஜீவரத்தினம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். பின்னர் அவர்களை தாக்கிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார். இந்த பிரச்சனை ஒரு வழியாக முடிந்தது என்று நினைத்த ஊழியர்களுக்கு அதிர்ச்சி தரும் விதமாக ஜீவரத்தினம் மறுபடியும் கடைக்கு வந்தார்.


ஊழியர்கள் யாரும் வெளியே ஓடிவிடக் கூடாது என்பதற்காக திட்டமிட்டு கடையின் ஷட்டரை மூடிவிட்டு தனது வெறியாட்டத்தை தொடங்கியுள்ளார். அவர் தனது ஆடைக்குள் மறைத்து வைத்திருந்த பெரிய வாளை எடுத்து, சுமார் 10 நிமிடங்களுக்கும் மேலாக அந்த இரு ஊழியர்களையும் சரமாரியாக வெட்டியுள்ளார்.

உயிருக்கு பயந்து அந்த ஊழியர்கள் கடைக்குள் அங்குமிங்கும் ஓடினர். மூலைகளில் பயந்து பதுங்கிய போதிலும், ஜீவரத்தினம் அவர்களைத் தேடி பிடித்து கொடூரமாக தாக்கியுள்ளார். உடல் முழுவதும் ரத்தம் வழிய, உயிருக்கு போராடிய நிலையில், எங்களை விட்டுவிடுங்கள் என்று அந்த ஊழியர்கள் இரு கைகூப்பி அவரிடம் கெஞ்சியுள்ளனர்.

ஆனாலும், அவர்களை தொடர்ந்து தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பி சென்றுள்ளார் ஜீவரத்தினம். பாதிக்கப்பட்டவர்கள் அளித்த புகாரின் அடிப்படையில் அமீன்பூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து தப்பியோடிய ஜீவரத்தினத்தை தீவிரமாக தேடி வருகின்றனர். இந்த சம்பவத்தின் சிசிடிவி காட்சிகளையும் ஆய்வு செய்து வருகின்றனர்.

# பத்ம விருதுகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

**புதுடெல்லி, ஏப்.29:**




பல்வேறு துறைகளில் சிறந்த முறையில் பணியாற்றியவர்களுக்கும், அளப்பரிய சாதனைகள் செய்தவர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் பத்ம விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. நாட்டின் உயரிய விருதுகளான பத்ம விபூஷண், பத்ம பூஷண் மற்றும் பத்மஸ்ரீ ஆகிய பத்ம விருதுகள் ஒவ்வோர் ஆண்டும் குடியரசு தினத்தன்று அறிவிக்கப்படும்.

லை, இலக்கியம், கல்வி, விளையாட்டு, மருத்துவம், சமூகப்பணி, அறிவியல், பொறியியல், பொது விவகாரங்கள், சிவில் சேவை உள்ளிட்ட துறைகளில் சிறந்தவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. இனம், தொழில், பதவி, பாலின வேறுபாடின்றி அனைத்து நபர்களும் இந்த விருதுகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

இந்த நிலையில் 2027-ம் ஆண்டுக்கான விருதுகளுக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஜூலை 31-ந்தேதி வரை விண்ணப்பிக்கலாம். தேசிய விருதுகள் இணையதளமான HTTPS://AWARDS.GOV.IN என்ற தளத்தில் மட்டுமே விண்ணப்பங்களை அனுப்ப முடியும். இது தொடர்பான விரிவான விவரங்கள் மத்திய உள்துறை அமைச்சகத்தின் இணையதளமான HTTPS://MHA.GOV.IN மற்றும் பத்ம விருதுகளுக்கான இணைய தளமான HTTPS://PADMAAWARDS.GOV.IN என்ற தளத்திலும் உள்ளன. விருதுகள் தொடர்பான விதிகள் HTTPS://PADMAAWARDS.GOV.IN/ABOUTAWARDS.ASPX வெளியிடப்பட்டுள்ளன.

இதேபோன்று, ராஷ்டிரீய புரஸ்கார் வலைத்தளத்தில் உள்ள படிவத்தில் கேட்கப்பட்ட அனைத்து விவரங்களையும் பூர்த்தி செய்து, 800 வார்த்தைகளுக்கு மிகாமல் பாராட்டு பத்திரமும் எழுதி, ஆன்லைனில் சமர்ப்பிக்க வேண்டும். மற்றவர்களுக்காக பரிந்துரைகளும் அனுப்பலாம் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. இந்த தகவல்களை உள்துறை அமைச்சகம் தெரிவித்து உள்ளது.

# வரலாற்று சிறப்பு மிக்க மைல்கல்: இந்தியா - நியூசிலாந்து ஒப்பந்தம் குறித்து பியூஸ் கோயல் கருத்து



**புதுடெல்லி, ஏப்.29:**

இந்தியா - நியூசிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் மற்றும் நியூசிலாந்து வர்த்தக அமைச்சர் டாட் மெக்லே ஆகியோர் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

கடந்த 10 ஆண்டுகளாக முடங்கிக் கிடந்த இரு நாடுகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தை, கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் மீண்டும் தொடங்கப்பட்டது.

இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ள நிலையில், இருநாடுகளுக்கும் இடையே புதிய பொருளாதாரப் பாலத்தை அமைக்கும் வகையில் இது இருக்கும் என மத்திய அரசு வட்டாரங்கள் கூறுகின்றன. இந்தியாவிலிருந்து நியூசிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்படும் தோல் பொருட்கள், கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் உள்ளிட்ட சுமார் 8,284 பொருட்களுக்கு 100 சதவீத வரி விலக்கு அளிக்கப்படும்.

நியூசிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வரும் கம்பளி, மரம், நிலக்கரி மற்றும் பழங்கள் மீதான வரிகள் குறைக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்தியா - நியூசிலாந்து இடையே ஏற்பட்டுள்ள தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று மத்திய மந்திரி பியூஷ் கோயல் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியிருப்பதாவது:-

"இந்தியா - நியூசிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தியாவின் பயணத்தில் மேலும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல் இது.

சிறந்த வணிகங்களுக்கும், பெரிய முதலீடுகளுக்கான வாய்ப்பு உருவாகிறது.

கடந்த 3½ ஆண்டுகளில் 9 தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை நிறைவு செய்துள்ளோம்" என்றார்.

# நிர்வாக வசதிக்காக லடாக், மேலும் 5 மாவட்டங்களாக பிரிப்பு

**லே, ஏப்.29:**

லடாக் யூனியன் பிரதேசத்தில் தற்போதுள்ள லே (LEH) மற்றும் கார்கில் (KARGIL) ஆகிய இரண்டு மாவட்டங்களுடன், புதிதாக 5 மாவட்டங்கள் சேர்க்கப்பட்டு, மொத்தம் 7 மாவட்டங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இன்று லடாக் துணை நிலை ஆளுநர் விகே சக்சேனா இந்த புதிய மாவட்டங்களுக்கான அறிவிப்பை வெளியிட்டார். ஆகஸ்ட் 2024 இல் மத்திய உள்துறை அமைச்சகம் இதற்கு ஒப்புதல் அளித்திருந்தது.

புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள மாவட்டங்கள்:

1. சான்ஸ்கர் (ZANSKAR)
2. டிராஸ் (DRAS)
3. ஷாம் (SHAM)
4. நுப்ரா (NUBRA)
5. சாங்தாங் (CHANGTHANG)

நிர்வாக வசதியை மேம்படுத்தவும், தொலைதூரப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு அரசின் சேவைகள் எளிதில் சென்றடையவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# மாநிலங்களவையில் பாஜகவின் பலம் 113 ஆக உயர்வு

**புதுடெல்லி, ஏப்.29:**

ஆம் ஆத்மி கட்சியை சேர்ந்த மேல்சபை எம்.பி.க்கள் ராகவ் சத்தா, அசோக் மித்தல், சந்தீப் பாடக், ஹர்பஜன் சிங், ராஜேந்திர குப்தா, விக்ரம் சஹ்னி மற்றும் ஸ்வாதி மாலிவால் ஆகிய 7 பேர் பா.ஜனதாவில் இணைந்தனர். இந்த 7 எம்.பி.க்களும் தங்களை பா.ஜனதா எம்.பி.க்களாக கருத வேண்டும் என்று மேல்சபை தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணனிடம் கடந்த வெள்ளிக்கிழமை மனு அளித்திருந்தனர். கட்சி மாறிய 7 எம்.பி.க்களையும் தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்று மேல்சபை தலைவரும், துணை ஜனாதிபதியுமான சி.பி. ராதாகிருஷ்ணனிடம் ஆம் ஆத்மி கட்சி குழு தலைவர் சஞ்சய் சிங் மனு அனுப்பினார். இந்த நிலையில் ஆம் ஆத்மி கட்சியின் 7 எம்.பி.க்கள் பா.ஜனதாவுடன் இணைவதை மேல்சபை தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொண்டார். இதன் மூலம் பாஜகவின் பலம் ராஜ்யசபாவில் 113 ஆக உயர்ந்துள்ளது. அதே நேரத்தில் அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சியின் பலம் 3 ஆக குறைந்துள்ளது

# 6 நாள் பயணமாக சிம்லா வந்தடைந்தார் திரவுபதி முர்மு

**சிம்லா, ஏப்.29:**

இமாச்சல பிரதேசத்தில் 27 முதல் மே 2 வரை கோடைக்கால சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார் ஜனாதிபதி திரவுபதி. இதனையொட்டி அவர் இன்று காலை சிம்லா வந்தடைந்தார். அவரை அம்மாநில முதல்-மந்திரி சுக்விந்தர் சிங், மற்றும் ஆளுநர் கவிந்தர் குப்தா மற்றும் மந்திரிகள் வரவேற்றனர். இந்தப் பயணத்தின் போது, ஜனாதிபதி முர்மு சிம்லாவில் உள்ள மஷோப்ராவில் அமைந்துள்ள ராஷ்டிரபதி நிவாஸில் தங்குகிறார்.

ஏப்ரல் 28 அன்று, சிம்லாவில் உள்ள லோக் பவனில் இமாச்சலப் பிரதேச ஆளுநர் ஏற்பாடு செய்துள்ள விருந்தில் ஜனாதிபதி கலந்துகொள்கிறார். ஏப்ரல் 29 அன்று, ஜனாதிபதி முர்மு அடல் சுரங்கப்பாதையை பார்வையிட்டு அதில் பயணம் செய்கிறார்.

ஏப்ரல் 30 அன்று, பாலம்பூரில் உள்ள சௌத்ரி சர்வான் குமார் இமாச்சல் பிரதேஷ் கிருஷி விஸ்வவித்யாலயத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்கிறார். அதே நாளில், மஷோப்ராவில் உள்ள ராஷ்டிரபதி நிவாஸில் அவர் 'அட் ஹோம்' வரவேற்பு நிகழ்ச்சியையும் நடத்துகிறார்.

ஜனாதிபதி வருகையை முன்னிட்டு சிம்லாவில் சுமார் 1,000 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த சிம்லா நகரம் முழுவதும் 3 பிரிவுகளாக பிரித்து போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

# ஆப்பிளை வறண்ட பகுதியில் விளைவித்து ஆந்திர விவசாயி சாதனை

**அமராவதி, ஏப்.29:**

இந்தியாவில் ஜம்மு - காஷ்மீர், இமாச்சல பிரதேசம் போன்ற குளிர்ச்சியான மலை பிரதேசங்களில் ஆப்பிள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. வறண்ட பகுதிகளில் இது சாத்தியம் இல்லை என்பதால், எப்போதும் ஆப்பிள் பழத்திற்கு மவுசு அதிகம். ஆனால், வறண்ட பகுதியிலும் ஆப்பிள் சாகுபடி செய்ய முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார், ஆந்திர விவசாயி ஒருவர்.

அம்மாநிலத்தில் அனந்தபூர் மாவட்டத்தில் கோட்டங்கா பகுதியை சேர்ந்தவர் ரமண ரெட்டி. விவசாயியான இவர், உலக அளவில் விவசாயத்தில் முன்னோடியாக திகழும் இஸ்ரேல் நாட்டில் இருந்து, ஆப்பிள் செடிக்கான கன்றுகளை தலா ரூ.250 விலையில் 1,500 எண்ணிக்கையில் வாங்கினார். கே.எல்.டி. என்ற நவீன ரகமான இந்த ஆப்பிள் கன்றுகளை, தனது 2.5 ஏக்கர் விவசாய நிலத்தில் ரமண ரெட்டி நட்டுவித்து, நீர் பாய்ச்சி பராமரித்தார். இதற்காக, அவர் ரூ.4 லட்சத்து 20 ஆயிரம் தொகையை செலவிட்டார். வறண்ட வானிலையை தாங்கி வளரும் தன்மை கொண்ட இந்த ஆப்பிள் மரக்கன்றுகள் நன்கு வளர்ந்தன. குளிர்ச்சியான மலை பிரதேசங்களில் வளரும் ஆப்பிள் மரங்கள் காய்ப்பதற்கு 7 முதல் 8 ஆண்டுகள் வரை ஆகும். ஆனால், இந்த நவீன ரக ஆப்பிள் மரங்கள் 2 ஆண்டுகளிலேயே காய்க்க தொடங்கி விடுகின்றன. தற்போது, 1 டன் (ஆயிரம் கிலோ) ஆப்பிள் பழங்களை அறுவடை செய்து விவசாயி ரமண ரெட்டி சாதனை படைத்துள்ளார். ஒரு கிலோ ஆப்பிள் ரூ.120 முதல் ரூ.170 வரை விலை போகிறது. தற்போது, ஆந்திராவில் ராயலசீமா பகுதியிலும் ஆப்பிள் செடிகள் பயிரிடப்பட்டுள்ளன.




# சென்னை | பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த நபர் கைது

**சென்னை, ஏப்.29:** சென்னை ஜாபர்கான்பேட்டை பகுதியைச் சேர்ந்த 27 வயது இளம் பெண் ஒருவர், தனது அக்காவுடன் வாடகை வீட்டில் வசித்து வருகிறார்.

இவர் அருகில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் ஊழியராகப் பணியாற்றி வருகிறார். கடந்த 25-ம் தேதி இரவு, அந்தப் பெண்ணின் அக்கா தனது உறவினரைப் பார்ப்பதற்காக வெளியே சென்றிருந்தார். இதனால் இளம்பெண் மட்டும் வீட்டில் தனியாக இருந்துள்ளார்.

அப்பெண் உறங்கிக் கொண்டிருந்தபோது, அந்த வீட்டின் உரிமையாளர் மகனான அனந்த கிருஷ்ணன் (41) வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்துள்ளார். அவர் தூங்கிக் கொண்டிருந்த பெண்ணிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாகத் தெரிகிறது.

இதனால் அதிர்ச்சியடைந்து விழித்த அந்தப் பெண் கூச்சலிட முயன்றபோது, அனந்த கிருஷ்ணன் கொலை மிரட்டல் விடுத்து அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

வெளியே சென்றிருந்த அக்கா வீடு திரும்பியதும், நடந்த கொடுமையைக் கூறி அந்த இளம்பெண் கதறி அழுதுள்ளார். இதையடுத்து, பாதிக்கப்பட்ட பெண் எம்.ஜி.ஆர் நகர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்த போலீஸார், அனந்த கிருஷ்ணனைப் பிடித்து விசாரணை நடத்தினர். அவர் ஒரு தனியார் நிறுவனத்தில் மேலாளராகப் பணிபுரிந்து வருவது தெரியவந்தது.

விசாரணையைத் தொடர்ந்து, அனந்த கிருஷ்ணனை போலீஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# தெலங்கானாவில் இருந்து கடத்தி வந்து சென்னையில் போதை மாத்திரை விற்பனை: இருவர் கைது

**சென்னை, ஏப்.29:** காவல் ஆணையர் உத்தரவின் பேரில், சென்னை முழுவதும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இதன் ஒரு பகுதியாக, காவல் துணை ஆணையர்களின் மேற்பார்வையில் அமைக்கப்பட்ட தனிப்படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.





அந்த வகையில், சென்னை ராமாபுரம் பகுதியில் சட்டவிரோதமாக போதை மாத்திரைகள் விற்பனை செய்யப்படுவதாக போலீஸாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. அதன்பேரில், நேற்று முன்தினம் ராமாபுரம் திருமலை நகர் பூங்கா அருகே போலீஸார் தீவிரமாகக் கண்காணித்தனர்.

அப்போது அங்கு சந்தேகத்துக்கிடமான முறையில் நின்று கொண்டிருந்த 2 இளைஞர்களைப் பிடித்து விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர்கள் முன்னுக்குப் பின் முரணாகப் பதிலளித்ததால், போலீஸார் அவர்களின் உடைமைகளைச் சோதனையிட்டனர்.

அப்போது அவர்கள் ஏராளமான வலி நிவாரண மாத்திரைகளை மறைத்து வைத்திருந்தது கண்டறியப்பட்டது.

இதுகுறித்து நடத்திய விசாரணையில், ஒருவர் மதுரவாயலைச் சேர்ந்த தனியார் கல்லூரி மாணவர் சுரேஷ் (23), மற்றொருவர் ராமாபுரம் பகுதியைச் சேர்ந்த ஸ்ரீராம் (19) என்பதும், இருவரும் தெலங்கானா மாநிலம், செகந்திராபாத்திலிருந்து இந்த வலி நிவாரண மாத்திரைகளைக் குறைந்தவிலைக்கு வாங்கி வந்து, சென்னையில் சட்டவிரோதமாக விற்றது தெரியவந்தது.

இதையடுத்து இருவரையும் கைது செய்த போலீஸார், அவர்களிடமிருந்து 1,380 வலி நிவாரண மாத்திரைகள் மற்றும் விற்பனைப் பணமான ரூ.1.47 லட்சம் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். போதைப் பொருட்கள் கடத்தலில் பின்னணியில் இருப்பவர்கள் குறித்து போலீஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கார் ஓட்டுநரை சர்ஜிக்கல் கத்தியால் வெட்டிய தனியார் மருத்துவமனை இயக்குநர் கைது

**சென்னை, ஏப்.29:** அயனாவரத்தில் மதுபோதையில் தகராறு செய்த கார் ஓட்டுநரை, சர்ஜிகல் கத்தியால் குத்திய தனியார் மருத்துவமனை இயக்குநர் கைது செய்யப்பட்டார்.



திருமுல்லைவாயில் எம்ஜிஆர் நகர் பகுதியைச் சேர்ந்தவர் சத்யா (32). இவர் அயனாவரம் கே.ஹெச். சாலையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் கடந்த மாதம் 20-ம் தேதி கார் ஓட்டுநராகப் பணியில் சேர்ந்துள்ளார்.

அவர் அடிக்கடி மது அருந்திவிட்டுப் பணிக்கு வந்ததாலும், சரியாக வேலைக்கு வராததாலும், மருத்துவமனை இயக்குநர் நவீன் கடந்த 4-ம் தேதி அவரைப் பணியிலிருந்து நீக்கியுள்ளார்.

இந்நிலையில், கடந்த 24-ம் தேதி மாலை மருத்துவமனைக்கு மது போதையில் வந்த சத்யா, இயக்குநர் நவீனிடம் பணம் கேட்டு தகராறு செய்துள்ளார். அப்போது சத்யாவிடம் ரூ.4 ஆயிரத்தை கொடுத்துவிட்டு, மீதிப் பணத்தைக் காலையில் தருவதாகக் கூறியுள்ளார்.

பணத்தைப் பெற்றுக் கொண்டு சென்ற சத்யா, மீண்டும் மது அருந்திவிட்டு வந்து, மருத்துவமனை ஊழியர்களிடமும் இயக்குநரிடமும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

இதனால் ஆத்திரமடைந்த இயக்குநர் நவீன், அங்கிருந்த சர்ஜிக்கல் கத்தியை எடுத்து சத்யாவின் தோள்பட்டையில் வெட்டியதாக கூறப்படுகிறது . இதில் காயமடைந்த சத்யா, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த அயனாவரம் காவல்துறையினர் விசாரணை நடத்தினர். இரு தரப்பினரும் அளித்த புகாரின் அடிப்படையில், நவீன் மற்றும் சத்யா ஆகிய இருவர் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

அதைத் தொடர்ந்து, மருத்துவமனை இயக்குநர் நவீனை போலீஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். சிகிச்சைக்குப் பின் கார் ஓட்டுநர் சத்யாவையும் கைது செய்ய உள்ளதாகப் போலீஸார் தெரிவித்தனர்.

# பெட்ரோல் - டீசல் வாங்க ஏனாமிற்கு படையெடுக்கும் ஆந்திர பண்ணை விவசாயிகள்: உள்ளூர்வாசிகள் பாதிப்பு

**புதுச்சேரி, ஏப்.29:** பெட்ரோல் - டீசல் வாங்க ஏனாமிற்கு படையெடுக்கும் ஆந்திர பண்ணை விவசாயிகள் கேன் மற்றும் பேரல்களுடன் பல மணி நேரம் காத்திருந்து வாங்குவதால் உள்ளூர் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.



ஆந்திரப் பிரதேசத்தில் அடிக்கடி ஏற்படும் மின்வெட்டு மற்றும் இயந்திரங்கள் மூலம் பயிர் அறுவடை செய்வதால் பெட்ரோல் மற்றும் டீசலுக்கு அதிக தேவை ஏற்பட்டுள்ளது. பெட்ரோல் டீசல் விநியோகத்திலும் அங்கு கட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடல் மற்றும் ஆற்றுப் பகுதியில் இறால் மற்றும் மீன் குட்டைகளில் அதிக ஜெனரேட்டர்களைப் பயன்படுத்தி வருகின்றனர். இந்தச் சூழ்நிலை காரணமாக ஆந்திராவை ஒட்டியுள்ள புதுச்சேரி பிராந்தியமான ஏனாமில் பெட்ரோல் மற்றும் டீசல் வாங்க வருவதால் உள்ளூர் மக்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பெட்ரோல் நிலையங்களில் கூட்டம் அலைமோதுகிறது. கேன்களை வரிசையில் வைத்து நுகர்வோர் காத்திருக்கின்றனர். பெட்ரோல் நிலையங்களில் காவல் துறை முன்னிலையில் எரிபொருள் விநியோகம் நடத்த ஏனாம் நிர்வாகம் தற்போது நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏனாம் காவல் கண்காணிப்பாளர் வரதராஜன் மேற்பார்வையில் மக்களுக்கு தடையின்றி எரிபொருள் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

எண்ணெய்நிறுவனங்களிடம் இருந்து வரும் விநியோகத்தில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக, கடந்த சில நாட்களாக எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இதனால் செவ்வாய்க்கிழமை முதல், ஏனாம் உள்ளூர் மக்களுக்கு பெட்ரோல் மற்றும் டீசல் ஆகியவை, உள்ளூர் பெட்ரோல் நிலையங்களில் காலை 5 மணி முதல் காலை 8 மணி வரை மட்டுமே விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அண்டை மாநிலமான ஆந்திரப் பிரதேசத்தை விட ஏனாமில் எரிபொருள் விலை ரூ.12 முதல் 14 வரை குறைவாக உள்ளது.

எனவே, ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் குறிப்பாக விவசாயிகள் பிளாஸ்டிக் கேன் மற்றும் பேரல்களுடன் எரிபொருள் வாங்க ஏனாமிற்கு திரண்டு வருகின்றனர். இவ்வாறு வெளியூர் மக்கள் திரண்டு வருவதால், ஏனாம் உள்ளூர் மக்கள் கோடை வெயிலில் மணிக்கணக்கில் காத்திருந்து, தங்கள் சொந்த வாகனங்களுக்கு எரிபொருள் பெறுவதற்குப் பெரிதும் சிரமப்பட்டு வந்தனர்.

பல்வேறு சங்கங்கள் இப்பிரச்சினையை எழுப்பியதைத் தொடர்ந்து, பிராந்திய நிர்வாக அதிகாரி சிவராஜ் மீனா, பெட்ரோல் நிலைய உரிமையாளர்களுடன் ஆலோசனை நடத்தி, காலை 5 மணி முதல் 8 மணி வரையிலான இந்த நேரத்தை ஏனாம் மக்களுக்கு பிரத்யேகமாக ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார்.

ஆந்திரப் பிரதேசத்தில் இருந்து வாங்குபவர்கள் வருவதற்கு முன்பாகவே, உள்ளூர் மக்கள் எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும் வகையில், ஏனாம் நிர்வாகம் அதிகாலை நேரங்களை அவர்களுக்காக இன்று முதல் ஒதுக்கியுள்ளது.

# நடுக்கடலில் மீன் பிடித்தபோது தாக்குதல் நடத்திய இலங்கை கடற்கொள்ளையரை பிடித்த நாகை மீனவர்கள்

**நாகப்பட்டினம், ஏப்.29:** கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நாகை மீனவர்களுக்கும், இலங்கை கடற்கொள்ளையர்களுக்கும் மோதல் ஏற்பட்டது. இதில் ஒருவரை நாகை மீனவர்கள் பிடித்து வந்து போலீஸாரிடம் ஒப்படைத்தனர்.



மேலும் 2 பேர் படகு மூலம் தப்பினர். நாகை மாவட்டம் செருதூரிலிருந்து பாலமுருகன் என்பவருக்குச் சொந்தமான பைபர் படகில் கடந்த 25-ம் தேதி சக்திமயில், அபிமன், பாலசுப்பிரமணியன், பழனிச்சாமி, கன்னியாகுமரி உவரி பகுதியை சேர்ந்த அபி ஆகியோர் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் அங்கு ஒரு படகில் இலங்கை கடற்கொள்ளையர்கள் 3 பேர் வந்தனர். மீனவர்களைத் தாக்கி, படகில் இருந்த மீன்கள், ஜிபிஎஸ் கருவி, செல்போன் ஆகிய வற்றை பறித்துக் கொண்டு, வலையையும் அறுக்க முற்பட்டனர்.

அதை தடுக்க முயன்றபோது இருதரப்பினர் இடையே மோதல் ஏற்பட்டது. இதில், கடற்கொள்ளையர்களில் ஒருவரை செருதூர் மீனவர்கள் பிடித்தனர். மற்ற 2 பேர் படகில் தப்பினர்.

பிடிபட்ட நபர் இலங்கை காங்கேசன்துறை வழலையைச் சேர்ந்த அயந்தன் என்பதும், இவர் உள்ளிட்ட 3 பேரும், இதற்கு முன் செருதூர் மீனவர் மணி வாசகம் என்பவரது படகை மறித்து, அதிலிருந்தவர்களை தாக்கி உடமைகளை கொள்ளையடித்ததும் தெரிய வந்தது.

பின்னர் அவரை செருதூர் மீன்பிடி இறங்கு தளத்துக்கு நேற்று அழைத்து வந்து கீழையூர் போலீஸாரிடம் மீனவர்கள் ஒப்படைத்தனர். கடலில் நடந்த மோதலில் காயமடைந்த அயந்தன், நாகை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அதேபோல, கடற்கொள்ளையர்கள் தாக்கியதில் காயமடைந்த செருதூர் மீனவர்கள் 7 பேரும் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதுகுறித்து பாதிக்கப்பட்ட மீனவர் மணிவாசகம் கூறும்போது, எங்கள் படகை வழிமறித்த இலங்கை கடற்கொள்ளையர்கள், படகில் இருந்த மீன்பிடி சாதனங்கள் மற்றும் மீன்களை பறித்துக் கொண்டனர்.

தொடர்ந்து நள்ளிரவு முதல் அதிகாலை 3 மணி வரை அடித்து உதைத்து கொடுமைப்படுத்தினர். எனது மகனின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி, இனி நீங்கள் வந்தால் பெட்ரோல் குண்டு வீசி கொன்று விடுவோம் என மிரட்டினர் என்றார்.

தாக்குதல் நடத்திய இலங்கை கடற்கொள்ளையர்களில் ஒருவரை தமிழக மீனவர்கள் பிடித்து வந்து தமிழக போலீஸாரிடம் ஒப்படைத்துள்ளது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# காஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் காலையில் வேலை நிறுத்தம் மாலையில் திரும்ப பெற்றனர்

**நாமக்கல், ஏப்.29:** வாடகை நிலுவை தொகையை வழங்கக் கோரி, தென்மண்டல காஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் நேற்று காலை வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், மாலையில் போராட்டத்தை வாபஸ் பெற்றனர்.

நாமக்கல்லை தலைமையிடமாகக் கொண்டு தமிழகம், கேரளா, ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய தென்மண்டல எல்.பி.ஜி.காஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்கம் செயல்பட்டு வருகிறது.

இச்சங்கத்தில் 4,500 காஸ் டேங்கர் லாரிகள் உள்ளன. இந்த லாரிகள் அனைத்தும் மத்திய அரசுக்குச் சொந்தமான ஐஓசி, பிபிசிஎல், எச்பிசிஎல் ஆகிய 3 எண்ணெய் நிறுவனங்களுக்குச் சொந்தமான சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து சமையல் எரிவாயுவை ஏற்றிக் கொண்டு பாட்டிலிங் மையங்களுக்கு எடுத்துச் செல்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் இயக்கப்படுகின்றன.

இதில், 1,000 எல்பிஜி காஸ் டேங்கர் லாரிகள் ஐஓசி நிறுவனத்துக்காக (இந்தியன் ஆயில் நிறுவனம்) இயக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிறுவனம் கடந்த சில ஆண்டுகளாக டேங்கர் லாரி உரிமையாளர்களுக்கு ரூ.50 கோடிக்கு மேல் வாடகை வழங்காமல் நிலுவையில் வைத்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், இந்த வாடகை நிலுவையை வழங்கக் கோரி நேற்று காலை முதல் ஐஓசி நிறுவனத்துக்கு இயக்கப்படும் காஸ் டேங்கர் லாரிகளில் லோடு ஏற்றாமல் ஆங்காங்கே நிறுத்தி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

இதனிடையே, ஐஓசி அதிகாரிகள், டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, 2 நாட்களில் வாடகை நிலுவைத் தொகை வழங்குவதாக உறுதியளித்தனர். இதை ஏற்று, டேங்கர் லாரி உரிமையாளர்கள் நேற்று மாலை வேலைநிறுத்தப் போராட்டத்தை திரும்பப் பெறுவதாக அறிவித்தனர்.

# வேளச்சேரி - பரங்கிமலை மின்சார ரயில் சேவைக்கு அமோக வரவேற்பு: தினமும் 28,000+ பேர் பயணம்

**சென்னை, ஏப்.29:** வேளச்சேரி - பரங்கிமலை இடையே பறக்கும் மின்சார ரயில் சேவை தொடங்கி 42 நாட்களை கடந்த நிலையில், நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. தற்போது நாள்தோறும் 28 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயணிக்கின்றனர்.



இத்தடத்தில் உள்ள புழுதிவாக்கம் நிலையத்தில் மின்தூக்கி, நகரும் படிக்கட்டு போன்ற வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சென்னையின் பொது போக்குவரத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது புறநகர் மின்சார ரயில் சேவை. சென்ட்ரல், கடற்கரை நிலையங்களில் இருந்து பல்வேறு இடங்களுக்கு மின்சார ரயில்கள் இயக்கப்படுகின்றன.

இதில் கடற்கரை - வேளச்சேரி இடையே இயக்கப்படும் பறக்கும் ரயில் வழித்தடத்தில் தினசரி ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பயணிக்கின்றனர்.

இதற்கிடையே, சென்னை கடற்கரை - வேளச்சேரி பறக்கும் ரயில் தடத்தின் விரிவாக்கமாக, வேளச்சேரி - பரங்கிமலை திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு 17 ஆண்டுகளுக்குப் பிறகு, கடந்த மார்ச் 14-ம் தேதி ரயில் சேவை தொடங்கியது.

இந்த வழித்தடம் மடிப்பாக்கம், கீழ்க்கட்டளை, புழுதிவாக்கம், ஆதம்பாக்கம், வேளச்சேரி உட்பட சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு பேருதவியாக உள்ளது. இத்தடத்தில் ஆரம்பத்தில் தினசரி 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் பேர் பயணித்தனர்.

இது படிப்படியாக அதிகரித்து, தற்போது தினசரி 28 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயணிக்கின்றனர். பரங்கிமலை ரயில் நிலையம் ஒரு முக்கிய போக்குவரத்து மையமாகத் திகழ்வதால் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்த நிலையத்தில் இருந்து புறநகர் மின்சார ரயில்கள், மெட்ரோ ரயில்கள் மூலமாக சென்னை நகரின் பல்வேறு இடங்களுக்கு எளிதில்செல்ல முடியும். இந்த ஆண்டு இறுதிக்குள் இத்தடத்தில் தினசரி பயணிப் போர் எண்ணிக்கை 30 ஆயிரத்தை கடந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆதம்பாக்கம் நிலையம் அதேநேரம், ஆதம்பாக்கம் ரயில் நிலையத்தை விரைவில் திறக்க வேண்டும் என்றும், புழுதிவாக்கம் ரயில் நிலையத்தில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து, புழுதிவாக்கத்தைச் சேர்ந்த ஜி.சிவக்குமார் கூறும்போது, "பரங்கிமலை - வேளச்சேரி தடத்தில் உள்ள புழுதி வாக்கம் நிலையம் தற்போது பரபரப்பாக காணப்படுகிறது. ஆனால், இந்த நிலையத்தில் பயணிகளுக்கான அடிப்படை வசதிகள் போதுமானதாக இல்லை.

மின்தூக்கிகள், நகரும் படிக்கட்டு வசதிகளை ஏற்படுத்தி, முறையாகப் பராமரிக்க வேண்டும். ரயில் நிலையம், தூய்மையாகவும், சுகாதாரமாகவும் பேணப்பட வேண்டும். அதேபோல், ஆதம்பாக்கம் ரயில் நிலையத்தை விரைவில் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும்" என்றார்.

இதுகுறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் கூறும்போது, "புழுதிவாக்கம் நிலையத்தில் மின்தூக்கி, நகரும் படிக்கட்டு போன்ற வசதிகளை ஏற்படுத்தும் பணி செயல்பாட்டில் உள்ளது. ஆதம்பாக்கம் ரயில் நிலையம் மக்கள் பயன்பாட்டுக்கு விரைவில் திறக்கப்படும்" என்றனர்.

# பென்னாகரம் அருகே கள்ளத்தனமாக மது விற்பனை: கடைகளை அடித்து நொறுக்கிய பெண்கள்



**தருமபுரி, ஏப்.29:** பென்னாகரம் அருகே கள்ளத்தனமாக மது விற்பனை செய்த கடைகளை பெண்கள் திரண்டு உடைத்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் சுற்று வட்டார பகுதிகளில் மதுபானங்களை கள்ளத்தனமாக விற்பனை செய்யும் சந்துக் கடைகள் ஆங்காங்கே செயல்பட்டு வருவதாக மக்கள் புகார் தெரிவித்து வருகின்றனர்.

இதுபோன்ற கடைகளால் ஏழை, எளிய மக்களின் குடும்ப பொருளாதாரம், குழந்தைகளின் கல்வி,வீட்டு நிம்மதி ஆகியவை பாழாவதாகக் கூறி காவல்துறையிடம் அப்பகுதி மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.

இருப்பினும், சந்துக் கடைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இந்நிலையில், சந்துக்கடைகளால் ஆத்திரமடைந்த பெண்கள் உள்ளிட்டோர் திரண்டு பென்னாகரம் அடுத்த போடூர் பகுதியில் செயல்படும் 4 சந்துக் கடைகளை நேற்று கல்வீசி தாக்கி நொறுக்கினர்.

மேலும், இவற்றில் ஒரு கடையில் மது விற்பனையில் ஈடுபட்டவர் பெண்களிடம் தகராறு செய்ததால் அவரைத் தாக்க முயன்றனர்.

இதனால் அவர் மானாவாரி விளை நிலங்களில் குதித்து தப்ப முயன்றபோது பெண்கள் தொடர்ந்து அவரை விரட்டிச் சென்றதால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த பென்னாகரம் போலீஸார் போடூர் பகுதியில் சந்துக் கடைகள் நடத்தி வந்த மாதேஷ் (59), சவுதா மணி (39), கோவிந்தராஜ் (48) ஆகிய 3 பேரைக் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 56

# ரயில்களில் மாற்றுத் திறனாளிகள் சிறப்பு பெட்டிகளில் பயணிக்க சலுகை



**சென்னை, ஏப்.29:** ரயில்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு பெட்டிகளில் பயணிக்க, இனி, யுடிஐடி என்னும் தேசிய தனித்துவமான அடையாள அட்டை பயன்படுத்தலாம் என, ரயில்வே வாரியம் அறிவித்துள்ளது.

இது குறித்து, ரயில்வே வாரியம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: இந்திய ரயில்வே வாரியம் சார்பில் இயக்கப்படும், ஒவ்வொரு சாதாரண மற்றும் விரைவு ரயில்களில், மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பு பெட்டிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் பயணிக்க, ரயில்வே வாரியம் வழங்கும் கட்டண சலுகை, பாஸ் பெற்றவர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டனர்.

இதர மாற்றுத் திறனாளிகள், முன்பதிவில்லாத சாதாரண பெட்டிகளில் கட்டணம் செலுத்தி பயணித்து வந்தனர். இந்நிலையில், தேசிய மாற்றுத் திறனாளி நலத்துறை வாயிலாக, யுடிஐடி என்னும் தனித்துவமான அடையாள அட்டை பெற்ற அனைவரும், இப்பெட்டிகளில் பயணிக்கலாம்.

ரயில்வே வாரியத்தின் கட்டண சலுகை பாஸ் பெற்றவர்களும் இப்பெட்டிகளில் பயணிக்கலாம். அத்தகைய பாஸ் பெறாத மாற்றுத் திறனாளிகள், கட்டண டிக்கெட் பெற்று, தங்கள் யுடிஐடி அட்டையை காட்டி, இந்த சிறப்பு பெட்டிகளில் பயணிக்கலாம்.

அனுமதியின்றி இப்பெட்டியில் பயணிக்கும் இதர பயணிகள் மீது, ரயில்வே சட்டத்தின் கீழ், உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை 1 லட்சத்தை தாண்டியது: 5 லட்சம் இலக்கு



**சென்னை, ஏப்.29:** தமிழகத்தில் 37,554 அரசு பள்ளிகள் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் 52 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். மாணவர்களின் நலன் கருதி கற்றல், கற்பித்தல் சார்ந்து எண்ணும் எழுத்தும், காலை உணவு, திறன்மிகு வகுப்பறைகள் உள்பட பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு அரசின் சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. இதனால் அரசு பள்ளிகளில் கடந்த காலங்களை விட மாணவர் சேர்க்கை தற்போது அதிகரித்து வருகிறது. தனியார் பள்ளிகளுக்கு இணையாக அரசு பள்ளிகளில் கல்வியின் தரம் உயர்த்தப்படுவதோடு, அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளும் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

இதற்கிடையில் வரும் கல்வி ஆண்டுக்கான (2026-2027) மாணவர் சேர்க்கையை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கடந்த மார்ச் 1-ம் தேதி தொடங்கி வைத்தார். இதைத்தொடர்ந்து, தமிழகம் முழுவதும் உள்ள அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை எண்ணிக்கை ஒரு லட்சத்தை கடந்துள்ளது. மழலையர் வகுப்புகளில் 6 ஆயிரத்து 796 பேரும், 1-ம் வகுப்பில் 97 ஆயிரத்து 737 பேரும், 2 முதல் 8-ம் வகுப்பு வரை 8 ஆயிரத்து 178 பேரும் என மொத்தம் 1 லட்சத்து 12 ஆயிரத்து 711 மாணவர்கள் இதுவரை சேர்ந்துள்ளனர். இன்னும் சேர்க்கை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

சட்டமன்ற தேர்தலையொட்டி ஆசிரியர்கள் பலர் தேர்தல் பணிக்கு சென்றதால் அரசு பள்ளிகளில் சேர்க்கையில் தொய்வு இருந்தது. தற்போது தேர்தல் பணி முடிவடைந்ததால், மாணவர் சேர்க்கை மீண்டும் வேகமெடுத்துள்ளது. தொடர்ந்து மே, ஜூன் மாதங்களிலும் மாணவர் சேர்க்கை நடைபெறும். அரசு பள்ளிகளில் 5 லட்சம் மாணவர்கள் சேர்க்கை நடைபெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதற்கான பணிகளில் ஆசிரியர்கள் ஈடுபட்டு உள்ளனர்.

கடந்த 2025-2026-ம் கல்வி ஆண்டில் அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை சுமார் 4 லட்சம் எண்ணிக்கை அளவில் இருந்தது. அதனை விட அதிகமாக வருகிற கல்வி ஆண்டில் மாணவர் சேர்க்கை நடத்த தமிழக அரசின் கல்வித்துறை முழு வீச்சில் ஈடுபட்டு வருகிறது. அரசின் திட்டங்கள் மற்றும் பொதுமக்களிடம் விழிப்புணர்வு காரணமாக அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.




# திருச்செந்தூரை தொடர்ந்து விஜய்யின் அடுத்த ஆன்மீக பயணம் எங்கே? வெளியான தகவல்





**சென்னை, ஏப்.29:** தமிழக சட்டமன்ற தேர்தல் கடந்த 23-ந்தேதி நடைபெற்றது. தேர்தல் முடிவுகள் வருகிற 4-ந் தேதி (திங்கட்கிழமை) வெளியாவதையொட்டி, தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் திருச்செந்தூருக்கு இன்று அதிகாலை சுமார் 5 மணிக்கு சுப்பிரமணிய சுவாமி கோவிலிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்தார். கடலில் இறங்கி வழிபாடு செய்த அவர், மலர்களை சாற்றி முருகனை மனமுருக வேண்டினார்.

கோவிலில் விஜய்க்கு திரிசுதந்திரர்கள் பூரண கும்ப மரியாதை அளித்து வரவேற்றனர். திருச்செந்தூர் கோவில் நிர்வாகம் சார்பாக விஜய்க்கு வேல் பரிசாக வழங்கப்பட்டது. தொடர்ந்து கோவிலுக்குள் சென்ற விஜய் முருகர், வள்ளி, தெய்வானை, சண்முகர், தட்சிணாமூர்த்தி, பெருமாள், சத்ரு சம்ஹார மூர்த்தி உள்ளிட்ட பரிவார தெய்வங்களை வணங்கினார். இந்த தரிசனத்தின் போது விஜய் தவெக பொதுச் செயலாளர் ஆனந்த் மற்றும் ரூட் தயாரிப்பு நிறுவனத்தின் தலைவர் ஜெகதீஷ் ஆகியோர் உடன் இருந்தனர். விஜய் திருச்செந்தூருக்கு வருகை தந்ததை குறித்து கேள்விப்பட்ட ரசிகர்கள், தொண்டர்கள் அதிகாலையில் ஆயிரக்கணக்கானோர் திரண்டதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

எதிரிகளை வீழ்த்தி தேர்தல் முடிவுகள் சாதகமாக அமைய வேண்டி, தவெக சார்பில் திருச்செந்தூர் முருகன் கோவிலில் இன்று சத்ரு சம்ஹார யாகம் நடத்தப்பட்டது. இந்தநிலையில் திருச்செந்தூரை தொடர்ந்து விஜய்யின் அடுத்த ஆன்மீக பயணம் எங்கே? என்பது குறித்து தகவல் வெளியாகி உள்ளது.

2026 சட்டமன்ற தேர்தல் முடிவுக்கு முன்பு, இன்று திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு சென்ற தவெக தலைவர் விஜய், வரும் 3ஆம் தேதி மராட்டியத்தில் உள்ள சீரடி சாய்பாபா கோவிலுக்கு சென்று வழிபாடு செய்ய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. முன்னதாக, 'தி கோட்' பட ரிலீஸ் மற்றும் தவெகவின் முதல் மாநாடு பணிகளுக்கு நடுவே, சீரடி சாய்பாபா கோவிலுக்கு சென்று விஜய் தரிசனம் செய்தது குறிப்பிடத்தக்கது.

தவெக தலைவர் விஜய் பலமுறை மராட்டியத்தில் ஷீரடி சாய்பாபா கோவிலுக்கு சென்று வழிபாடு நடத்தியுள்ளார். 2024 ஏப்ரல் மாதம் சாய்பாபா சந்நிதியில் அவர் எடுத்த புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலானது.

# திண்டிவனம் அருகே அரசு பஸ் மீது லாரி மோதி விபத்து - ஒருவர் உயிரிழப்பு



**சென்னை, ஏப்.29:** திண்டிவனம் அருகே சலவதி பகுதியில் அரசு பஸ் வந்தபோது, திருவண்ணாமலையில் இருந்து புதுவை நோக்கிச் சென்ற லாரி, பஸ் வருவதை கவனிக்காமல் நெடுஞ்சாலையைக் கடக்க முயன்றுள்ளது.

அப்போது லாரி மோதியதில் அரசு பஸ் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில், பஸ்சில் பயணித்த 40 பயணிகள் காயமடைந்தனர். உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்த போலீசார் மற்றும் தீயணைப்புத் துறையினர் பஸ்சில் சிக்கிய பயணிகளை மீட்டு, திண்டிவனம் உள்ளிட்ட அரசு மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்தில் அரசு பஸ்சின் ஓட்டுநர் சக்திவேல் சம்பவ இடத்திலேயே பலியானார். அவரது உடல் திண்டிவனம் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து காரணமாக சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் சுமார் 5 கி.மீ.க்கு மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. காவல்துறையினர் விபத்துக்குள்ளான வாகனங்களை அகற்றி, போக்குவரத்தை சீர்செய்தனர்.

மேலும், தப்பியோடிய லாரி ஓட்டுநரை காவல்துறையினர் தேடி வருகின்றனர்.

# மருத்துவரிடம் ஆசை வார்த்தை கூறி ரூ.14.71 லட்சம் மோசடி: கேரள வாலிபர் கைது

**நெல்லை, ஏப்.29:** நெல்லை பெருமாள்புரம் பகுதியைச் சேர்ந்த கிஷோர் (வயது 24), தனியார் மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றி வருகிறார். கடந்த 2024-ம் ஆண்டு டிசம்பர் மாதம் இவரது வாட்ஸ்அப்பிற்கு ஒரு குறுஞ்செய்தி வந்தது. அதில் பிரபல நிறுவனத்தின் மனிதவள மேலாளர் என அறிமுகம் செய்து கொண்ட மர்ம நபர் ஒருவர், வீட்டில் இருந்தபடியே சில ஆன்லைன் பணிகளைச் செய்வதன் மூலம் தினமும் ரூ.8 ஆயிரம் வரை சம்பாதிக்கலாம் என ஆசை காட்டியுள்ளார்.

ஆரம்பத்தில் சில படங்களை ஸ்கிரீன்ஷாட் எடுத்து அனுப்பிய கிஷோருக்கு, கைமேல் பலன் கிடைப்பது போல சில தொகைகளை அவரது வங்கிக் கணக்கில் மர்ம நபர் வரவு வைத்துள்ளார். இதை உண்மை என்று நம்பிய கிஷோரை, டெலிகிராம் செயலியில் ஒரு கணக்கை தொடங்க வைத்து, அதில் அதிக முதலீடு செய்தால் பல மடங்கு லாபம் கிடைக்கும் என நம்ப வைத்துள்ளனர்.

இதனை நம்பி, டாக்டர் கிஷோர் தனது மற்றும் நண்பர்களின் வங்கிக் கணக்குகள் மூலம் மொத்தம் ரூ.14 லட்சத்து 71 ஆயிரம் வரை பல்வேறு தவணைகளாக செலுத்தியுள்ளார்.

பெருமளவு பணத்தை செலுத்திய பிறகு, கிஷோரால் ரூ.12 ஆயிரம் மட்டுமே திரும்ப எடுக்க முடிந்தது. மீதமுள்ள பணத்தை எடுக்க முயன்றபோது, மேலும் பல லட்சம் ரூபாய் கட்ட வேண்டும் என அந்த நபர் வற்புறுத்தியுள்ளார். அதன் பிறகு, தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த கிஷோர், நெல்லை மாநகர சைபர் கிரைம் போலீசில் புகார் அளித்தார். சைபர் கிரைம் போலீசார் நடத்திய தீவிர விசாரணையில், இந்த மோசடியில் ஈடுபட்டது கேரள மாநிலம், எர்ணாகுளம் பகுதியை சேர்ந்த அகில்கிருஷ்ணா (26) என்பது தெரியவந்தது.

இதையடுத்து கேரளாவிற்கு விரைந்த தனிப்படை போலீசார், அகில்கிருஷ்ணாவை கைது செய்து நெல்லைக்கு அழைத்து வந்தனர். ஆன்லைன் மூலம் வரும் வேலைவாய்ப்பு செய்திகளை நம்பி பொதுமக்கள் ஏமாற வேண்டாம் என போலீசார் எச்சரித்துள்ளனர்.

# தமிழ்நாட்டில் சட்ட விரோத மது வணிகம் தலைவிரித்தாடுவதற்கு சான்றுதான் போடூர் நிகழ்வு: அன்புமணி கண்டனம்



**சென்னை, ஏப்.29:** பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தருமபுரி மாவட்டம் பென்னாகரத்தை அடுத்த போடூர் என்ற கிராமத்தில் 4 இடங்களில் சட்டவிரோதமாக செயல்பட்டு வந்த சந்து மதுக்கடைகளை அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் ஒன்று சேர்ந்து சூறையாடியுள்ளனர். சட்டவிரோதமாக மது வணிகம் செய்து வந்த கோவிந்தன் என்பவர் பெண்களிடம் சிக்காமல் தப்பி ஓடியுள்ளார். எந்த ஒரு சிக்கலுக்கும் மக்களே சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்வது விரும்பத்தக்க தீர்வு அல்ல என்றாலும், அப்படி ஒரு சூழலுக்கு அந்த கிராம மக்களைத் தள்ளியது தமிழகத்தை 5 ஆண்டுகளாக ஆட்சி செய்த தி.மு.க. தான்.

போடூர் கிராமத்தில் செயல்பட்டு வரும் 4 சந்து கடைகளும் இப்போது புதிதாக முளைத்தவை அல்ல. அவை கடந்த 5 ஆண்டுகளாகவே செயல்பட்டு வருகின்றன. அவற்றை அகற்ற வேண்டும் என்று அங்குள்ள மக்கள் பல போராட்டங்களை நடத்தியுள்ளனர். போடூர் மட்டுமின்றி ஒட்டுமொத்த தருமபுரி மாவட்டம் முழுவதும் இதே போன்ற சந்துக் கடைகள் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றன. அவற்றுக்கு எதிராக தி.மு.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தருமபுரி மாவட்டத்தில் சட்டவிரோதமாக செயல்பட்டு வரும் சந்துக்கடைகளை அகற்ற வேண்டும் என்று வலியுறுத்தி பல போராட்டங்களை பாட்டாளி மக்கள் கட்சி நடத்தியிருக்கிறது. சட்டப்பேரவையிலும் இது தொடர்பாக தருமபுரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி. வெங்கடேஸ்வரன் குரல் எழுப்பியுள்ளார். ஆனால், அவற்றை மூடுவதற்கு தி.மு.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக, சில பெண்களை பணம் கொடுத்து அழைத்து வந்து 7 கிராமங்களில் அரசு மதுக்கடைகளை திறக்க வேண்டும் என்று தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் போராட்டம் நடத்தச் செய்த கீழ்த்தரமான அரசியலைத்தான் தி.மு.க. செய்தது.

தமிழ்நாடு முழுவதும் 4,787 டாஸ்மாக் கடைகள் சட்டப்பூர்வமாக செயல்பட்டு வருகின்றன என்றால், சட்டவிரோதமாக 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சந்துக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்கள் சீரழிக்கப்படுவது ஒரு புறம் என்றால், இன்னொருபுறம் இந்த சந்துக்கடைகளில் விற்பனை செய்யப்படும் மது வகைகளுக்கு கலால் வரி, மதிப்புக் கூட்டு வரி ஆகியவை வசூலிக்கப்படாமல் ஏய்க்கப்படுவதன் மூலம் ஆண்டுக்கு ரூ.50 ஆயிரம் கோடிக்கும் கூடுதலாக ஊழல் செய்யப்படுகிறது.

இதற்கு எதிராக பா.ம.க. பலமுறை போராடியும் மது வணிகத்தையே முதல் கொள்கையாகக் கொண்ட தி.மு.க. அரசு சந்துக்கடைகளுக்கு ஆதரவாகவே இப்போது வரை செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் சட்டவிரோத மது வணிகம் தலைவிரித்தாடுகிறது என்பதற்கான மிக மோசமான சான்று தான் போடூர் நிகழ்வு ஆகும். இந்த நிகழ்வை மது வணிகத்திற்கு எதிரான மக்களின் கொந்தளிப்பாகத் தான் பார்க்க வேண்டுமே தவிர, குற்றமாக பார்க்க கூடாது; இதற்காக சம்பந்தப்பட்ட கிராம பெண்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது. மாறாக, தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வரும் சட்டவிரோத சந்துக் கடைகளை மூடுவதற்கு அரசும், காவல்துறையும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# திருநங்கைகளுக்கான அழகிப்போட்டி: மிஸ் கூவாகமாக கோவை சூர்யா தேர்வு



**கள்ளக்குறிச்சி, ஏப்.29:** கள்ளக்குறிச்சி மாவட்டம் கூவாகம் கூத்தாண்டவர் கோவில் சித்திரை திருவிழா கடந்த 14-ந்தேதி சாகை வார்த்தல் நிகழ்ச்சியுடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. விழாவின் முக்கிய நிகழ்வாக இன்று (செவ்வாய்க்கிழமை) அரவான் சாமி கண் திறத்தல் நிகழ்ச்சியும், நாளை (புதன்கிழமை) தேரோட்டமும் நடைபெறுகிறது.

இவ்விழாவில் கலந்துகொள்வதற்காக நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான திருநங்கைகள், கூவாகம் கிராமத்திற்கும், விழுப்புரம் நகருக்கும் வருகை தந்துள்ளனர். இவர்களை மகிழ்விக்கும் வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள், அழகிப்போட்டிகள் நடந்து வருகிறது. அந்த வகையில் நேற்று தென்னிந்திய திருநங்கையர் கூட்டமைப்பு மற்றும் தமிழ்நாடு அரசு சமூக நலத்துறை, தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் ஆகியவை இணைந்து மிஸ் கூவாகம் நிகழ்ச்சியை நடத்தியது.

இதில் விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சென்னை, தூத்துக்குடி, நாமக்கல், ஈரோடு, சேலம், கோவை, திருச்சி, விருதுநகர், தேனி, புதுச்சேரி, பெங்களூரு, மைசூர், மலேசியா, புனே உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த 40 திருநங்கைகள் கலந்துகொண்டு விதவிதமான, வண்ண, வண்ண உடைகளில் மேடையில் தோன்றி ஒய்யாரமாக நடந்து வந்தனர். இவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் மற்ற திருநங்கைகள் கைத்தட்டி ஆரவாரம் செய்தனர்.

இப்போட்டியின் முதல் சுற்றில் நடை, உடை, பாவனை ஆகியவற்றின் அடிப்படையில் திறமையாக செயல்பட்ட திருநங்கைகள் 25 பேர் 2-ம் சுற்றுக்கு தேர்வு செய்யப்பட்டனர். இவர்கள் மீண்டும், மேடையில் தோன்றி ஒய்யாரமாக நடந்து வந்தனர். அவர்களில் 15 பேர், இறுதிச்சுற்றுக்கு தேர்வு செய்யப்பட்டனர். 2-வது சுற்று அழகிப்போட்டிக்கு தேர்வு செய்யப்பட்ட 15 பேரும் மீண்டும் மேடையில் ஒய்யாரமாக நடந்து வந்தனர்.

தமிழ் கலாசாரம், நடை, உடை, பாவனை ஆகியவற்றின் அடிப்படையில் நடந்த இந்த சுற்றின் முடிவில் 7 பேர் தேர்வு செய்யப்பட்டனர். இவர்களில் மிஸ் கூவாகமாக யாரை தேர்ந்தெடுப்பது என்பதற்காக இவர்கள் 7 பேருக்கும் பொது அறிவுத்திறன் குறித்தும். எய்ட்ஸ் விழிப்புணர்வு குறித்தும் பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டன. இதில் சிறந்த முறையில் பதில் அளித்த கோவையை சேர்ந்த சூர்யாகுட்டி மிஸ் கூவாகமாக தேர்வு செய்யப்பட்டார். மலேசியாவை சேர்ந்த நிஷா 2-ம் இடத்தையும், புதுச்சேரியை சேர்ந்த அனன்யா 3-ம் இடத்தையும் பிடித்தனர்.

இவர்களுக்கு கிரீடம் சூட்டப்பட்டு முதல் பரிசாக ரூ.50 ஆயிரமும், 2-ம் பரிசாக ரூ.25 ஆயிரமும், 3-ம் பரிசாக ரூ.11 ஆயிரமும் வழங்கப்பட்டது. சிறந்த திருநங்கைகளாக தேர்வு செய்யப்பட்ட 3 பேருக்கும் சக திருநங்கைகள் முத்தமிட்டு வாழ்த்துகளை தெரிவித்தனர். மேலும் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற திருநங்கைகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. முன்னதாக கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் சிறந்து விளங்கி வரும் 10 இளம் திருநங்கைகளை பாராட்டி அவர்களுக்கு இளம் திருநங்கைக்கான சாதனையாளர் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM